விலை ரூபா 1-00

# உதயசூரியன்

UTHAYASURIYAN

தமிழர் விடுதலைக் கூட்டணி வார இதழ்

கதிர் 1 | திருவள்ளுவராண்டு 2011 | 24-4-81 | வெள்ளிக்கிழமை | ஒளி 30

மானும் புலியும் ஒரே துறையில் தண்ணீர் குடித்தன என்று அந்தக்காலத்தில் ஆட்சிச் சிறப்புக்கு எடுத்துக் காட்டினை எழுதிக் காட்டுவார்கள். இப்போது மானும் புலியும் கூடவேண்டாம், மானும் மானுமாவது ஒரே துறையில் தண்ணீர் குடிக்க வேண்டாமா!

கலைஞர் - மு. கருணாநிதி

# விடுதலை இயக்கம் சிதைய விடோம்!

## "லண்டன் முரசு" ஆசிரியர் சதானந்தன் திடசங்கற்பம்!

தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ்மக்களின் ஒரே ஒரு கட்சி. எத்தனைதான் தவறுகள் ஏற்பட்டாலும் தமிழர்கள் அரும்பாடுபட்டு வளர்த்த கட்சியையும் ஒற்றுமையையும் எந்தக் காரணத்தையிட்டும் தமிழர்களின் வளர்ச்சிக்காகவும் மேன்மைக்காகவும் உழைத்துவரும் 'லண்டன் முரசு' போன்ற பத்திரிகைகள் உருக்குலைப்பதை நினைத்துப் பார்க்க முடியாது.

இவ்வாறு- 'லண்டன்முரசு' மாத இதழின் தோற்றுவிப்பாளரும் அதன் முழுநேர ஆசிரியரும் உரிமையாளருமான திரு.ச.ம. சதானந்தன் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தமது அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது-

30-3-81 வீரகேசரியில் நானே நலலூரில் தந்தை செல்வாவின் பிறந்ததினவிழா' என்ற செய்தித் தலைப்பில், லண்டன்முரசு பற்றி இரு தவறான தகவல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. பத்திரிகை தர்மம் நிலைக்கவும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு பாதகம் விளையாமல் இருக்கவும் என இந்த அறிக்கையை நாம் வெளியிடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

மேற்படிச் செய்தியில் உள்ள சில வாசகங்களினால், தமிழர் விடுதலைக்கூட்டணி மீது லண்டன்முரசு அதிருப்தி கொண்டுள்ளது போன்ற எண்



ணத்தை மக்கள் மனதில் விதைப்பதுடன், லண்டன் முரசுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி, அதன் ஆதரவாளர்கள் ஆகியோருக்குமிடையில் வீண் பகைவளர வழிவகுப்பது போலுள்ளது.

'லண்டன்முரசு' தமிழர் விடுதலைக்கூட்டணியின் வளர்ச்சிக்கும் பலத்துக்கும் ஆதரவு கொடுக்கும் ஒரு ஏடு.

இதன் ஆசிரியர் திரு. ஞானசூரியன் என சில காலமாகச் சில பத்திரிகைகள் வெளியிட்டு வந்த செய்திகளும் தவறானவையாகும்.

**************

தமிழீழத் தந்தை

### செல்வா நினைவு நாளில்

"உதயசூரியன்"

அவர் தாள் பணிந்து தனது அஞ்சலியைச் செலுத்துகிறது!

**************

## ஆசிரியர் சங்கம் கூட்டணியை ஆதரிக்கும்

எதிர்வரும் மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தலில்வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரிப்பதென அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் முடிவு செய்துள்ளது.

சங்கத்தின் ஆட்சிக்குழு 19-4-81ல் இந்துக்கல்லூரியில் உப தலைவர் திரு. வ. அ. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றபோதே மேற்படித் தீர்மானம் எடுக்கப்பட்டது.

## ஐ. தே. கட்சி ஆட்சியில்!

இனவிரோதப் போக்குடைய ஐக்கியதேசியக்கட்சிஆட்சியில் தமிழ் ஆசிரியர் பற்றுக்குறை நீடித்து வருகின்றது. இதனால் தமிழ் மாணவர்களின் எதிர்காலமே பாதிக்கப்பட்டுள்ளது. வடக்குமாகாணத்தைப் பொறுத்தவரையில்2,500 ஆசிரியர்களுககு பற்றுக்குறை உண்டு எனறு தெரிகின்றது. இதனைப் போல கிழக்கு மாகாணத்தில் 167 மாணவர்களுக்குப் படிப்பிக்க ஓர் ஆதிரியர் மட்டுமே பணிபுரியும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

## ஆயுதப்படையின் அட்டகாசம்

தெல்லிப்பழைச் சந்தியில் கடந்த 13-4-81 திங்கட்கிழமை ஆயுதப்படையினர் சயிக்கிளில் அவ்வழியால் வந்த இளைஞர்களை இப்சித்து சயிக்கிள்களை தோளில் சுமத்தி நடப்பித்தனராம், அப்போது அவ்வழியால் வந்த எதிர்க்கட்சி முதல்வர் நேரில்கண்டு- உடனேயே வடபிராந்தியப் பொலிஸ்மாஅதிபரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

## மட்டக்களப்பு மக்கள் கொதிப்பு!

கடந்த எழுபது ஆண்டுகளாக மட்டக்களப்பு பயனியர் வீதியில் இயங்கி வந்த மட்டக்களப்பு மாவட்ட வனபரிபாலன அலுவலகத்தை உடனடியாக அம்பாறைக்கு மாற்றும்படி வனபரிபாலன அதிபர் உத்தரவிட்டிருக்கின்றார்.

மட்டக்களப்பு-- அம்பாறை மாவட்ட அலுவல்களைக் கவனித்து வந்த இந்த அலுவலகம் தற்போது மூடப்படுகிறது குறித்து பொதுமக்கள் பெரிதும் கொதிப்படைந்துள்ளனர்.

'பிரதேசம் பிரதேசம்' என்று தினமும் பேசித் தள்ளுகின்ற இரண்டு மந்திரிகளாலும் இந்த அநியாயத்தைத் தடுத்து நிறுத்த முடியாதா என்று அவர்கள் ஆத்திரத்துடன் கேட்கின்றார்கள்.

---

## பிரான்சிலிருந்து ஒருகடிதம்!

தமிழா விடுதலைக்கூட்டணியின் வார இதழான 'உதயசூரியன்' ஏட்டில் வெளிவரும் பல விடயங்கள் ஆழமான கருத்தைக கொண்டுள்ளன தலையங்கங்கள் பாமரமக்களையும் கவரககூடியதாக திட்டப்படுவது நல்லது. 27-3-81 உதயசூரியன்ன் ஆசிரியா பேசுகூறா பகுதயில் எழுதப்பட்ட கருத்துககள் ஆழயானதாகவும் எதிரணியினரைக் கவரககூடியதாயும் இருந்தது. இப்படியான கருத்துக்களை மிகவும் சிறப்பான முறையில் ஒவ்வொரு இதழிலும் வெளியிடுங்கள்.

இவ்வாறு-- பிரான்சு தமிழர் இயக்கத்தின் துணைப் பொருளாளர் திரு. சே. ஜெயவீரசிங்கம் 'உதயசூரியன்' ஆசிரியருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# அடிமைத்தளையை உடைக்க அணிசேரா நாடுகள் ஆதரவு!

நமீபியவிடுதலைப்போராட்ட வீரர்சளுக்கு நிதி உதவியும் இராணுவ உதவியும் அளிப்பதென அணிசேரா நாடுகள் இயக்கம் தீர்மானித்துள்ளது.

அல்ஜீரியாவில் நடைபெற்ற நமீபியாவின் இன்றையநிலை பற்றிய மண்டல சார்பற்ற நாடுகள் ஒருங்கிணைப்புக்கழகத்தின் மந்திரிகள் நிலையிலான அவசரக்கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

நமீபியா நிலைபற்றிய ஐக்கிய நாடுகள் சபை தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு ஐ. நா. பாதுகாப்புச்சபையை உடனடியாகக் கூட்டவேண்டும் என்று கோருவதென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தின் இறுதியில் வெளியிடப்பட்டஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தென்மேற்கு ஆபிரிக்க மக்கள் ஸ்தாபனத்தின் கீழ் தமது சுதந்திரத்திற்காகப் போராடும் நமீபியா மக்களுக்கு ஆதரவளிக்கவேண்டியது அணிசேரா இயக்கத்தின் கடமையாகும்

நமீபியாவிலிருந்து தென் ஆபிரிக்கா தனது படைகளை விலக்கிக் கொள்வதை வலியுறுத்தும்வகையில்அந்நாட்டுக்கு எதிராக எண்ணெய் பொருளாதார தடைகளை ஐ. நா விதிக்க வேண்டும்.

(ஈழநாடு 21-4-81)

## துவக்கு முனையில்....!

கலை நிகழ்ச்சி ஒன்றில் பங்குபற்றி விட்டு வந்த கலைஞர்களை வசாவிளான்சந்தியில் நள்ளிரவுநேரம்ஆயுதமுனையில்இறக்கி அவர்களிடம் கேள்விகள் தொடுக்கப்பட்டன, பதிலும் அவர்களால் நிதானமாகவே கொடுக்கப்பட்டன. இறுதியில் ஆயுதபாணிகளான அதிகாரிகள் "நாங்கள் இங்கு விடிய விடிய சும்மா விழித்துக் கொண்டு நிற்கவேண்டியுள்ளது. நீங்கள் காசுவாங்கிக் கொண்டு கச்சேரி நடத்திவிட்டு வருகிறீர்கள் என்று கூறி இவ்விடத்திலும் ஒரு கச்சேரி நடத்திவிட்டுப் போங்கள்" எனக் கண்டிப்பாகக் கேட்டு அந்த நள்ளிரவில் வசாவிளான் சந்தியில் கச்சேரி வைப்பித்தார்கள்.

தமிழ் ஈழம் தமிழர் தாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதில் வருவது பதில்.

ரோ நமசிவாயம்
யோகபுரம்

கே: தலைவர் அமிர் மீது சிலர் வேண்டுமென்றே பொருமைத் தீயை அள்ளிக் கொட்டுகிருர்களே!. . .

ப: சந்தோஷப்படுங்கள்- தங்கம் நெருப்பிலே போடப் படுகின்றது.

கே: பண்டிதர் கா. பொ. அவர்களை மிலேச்சர். எனும் கருத்துப்பட 'சுடர்' ஆசிரியர் கரிகாலன் தமது பத்திரிகையில் ஒரு கேள்விக்குப்பதில் சொல்லியுள்ளதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்.

ப: அகத்தின் அழகை முகம் மட்டுமல்ல- ஒருவர் பயன்படுத்துகின்ற வார்த்தைகளும் எடுத்துக்காட்டும்! கரிகாலன் தம்மை யாரென்று நமக்குக் காட்டிக் கொண்டிருக்கிருர்.

✲

மு. சிங்காரவேல்
மட்டக்களப்பு

கே. நீலவானம், நிலவு, நட்சத்திரங்கள் இவற்றையெல்லாம் காணும்போது எப்படியிருப்பீர்கள்?

ப: உணர்ச்சி அலையால் கொந்தளிப்பேன் 'பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர் வண்டு பாடுவதும் வியப்போ?' என்று பாரதி பாடினனே- அப்படி என் மனம் பாடி மகிழும்.

கே: விடியற்காலையில் நிலவு ஏன் வெளிறிப்போகின்றது?

ப: இரவுப்போதில் மாடியில் படுத்திருந்த மங்கையரின் அழகிய முகங்களைக் கண்ட நிலவு- என்னைவிட எவ்வளவு அழகாக இவர்கள் இருக்கின்ருர்கள் என்று எண்ணி வெட்கம் அடைகிறதாம். அதனுல் அது வெளிறிப் போகின்றதாம் என்கிருர் மகாகவி காளிதாசன். அபாரமான கற்பனை; இல்லையா?

✲

க. பாஸ்கரன்
67-1, வவுனிக்குளம்

கே: 'சுடர்' தான் தமிழினத்தின் பத்திரிகையாமே?

ப: இப்படி ஒரு விளம்பரம் அப்பத்திரிகைக்குத் தேவையென்று கரிகாலன் நினைக்கிருரோ, என்னவோ!

✲

செல்வி. வ. நிர்மலா
திருக்கோணமலை

கே: மாவட்டசபைத் தேர்தலில் கூட்டணி மண்கவ்வும் என்கிருர்கள் சிலர். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்!

ப: அவர்கள் சொல்வது உண்மைதானே! தமிழர் பூமியை கூட்டணி அப்படியே கவ்விப்பிடித்துக் கொள்ளத்தான் போகிறது.

✲

செல்வன் க. சிவநேசன்
கல்முனை

கே: உடன்பிறந்தேகொல்லும் வியாதி யார்?

ப: 'தீவிரம்' என்ற போர்வையில் இயக்கத்தைச் சீரழித்துக் கொண்டிருக்கிருர்களே- அவர்கள்!

கே: மதுவில் ஆடும் ஒரு கவிஞன் என்ன பாடுவான்?

ப: 'கையில் கம்பன் கவி உண்டு, கலசம் நிறைய மதுவுண்டு' என்று உமார் கயாமாகப்பாடுவான். அல்லது 'ஒரு கிண்ணத்தை ஏந்துகிறேன், பல எண்ணத்தில் நீந்துகிறேன்' என்று கவிஞர் கண்ணதாசனைக் கூவுவான்.

✲

கே. சதானந்தன்
யாழ்ப்பாணம்

கே: வீரகேசரியில் வெளிவந்த 'லண்டன் முரசு' ஆசிரியரின் அறிக்கை எப்படி?

'கிருஸ்ணு' வின் வீலையான தமிழீழப்பிரகடனத்தைக் கண்டுகளிக்க லண்டனில் வாழும் தமிழர்களே தயாரில்லை என்பதை அது காட்டிவிட்டது. பாவம்- 'கிருஸ்ணு' பக்தர்கள்!

✲

செல்வி எஸ். றெஜினு
மட்டக்களப்பு

கே: மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தலுக்கான யு. என். பி. வேட்பாளர் பட்டியலில் எங்கள் தொகுதியை அமைச்சர் தேவநாயகம் கடைசி இடத்துக்குத் தள்ளிவிட்டாரே!

ப: 1983 பாராளுமன்றத் தேர்தலில் அமைச்சர் இராசதுரைக்கு கடைசி இடம் கூட கிடைக்குமா என்பது சந்தேகம். கற்குடாத் தேவநாயகத்திடம் இராசதுரை இனி வாலாட்ட முடியாதென்பதை மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தலுக்கு அவர் வேட்பாளர் தேர்ந்தெடுத்தமுறை நிருபித்துவிட்டது. அமைச்சர் இராசதுரையின் அரசியல் வாழ்க்கையின் அஸ்தமன காலம் இது. நம்புங்கள்!

கே: அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் யு. என். பி. தனது லிஸ்ற்றில் நான்காவதாகவே ஒரு தமிழருக்கு இடம் கொடுத்துள்ளதைப் பற்றி அம்மாவட்ட மக்கள் என்ன நினைப்பார்கள்?

ப: யு. என். பி. ஆட்சியைப் பொறுத்தவரையில்அம்பாறை மாவட்டம் ஒரு சிங்களப்பிரதேசம். அங்கே உழுதுபயிரிடுபவன் தமிழன் என்ருல் ஊதியம் பெறுபவன் புத்தபிக்கு. தமிழும், தமிழனும் அந்த மண்ணின் அனுதைகள். இந்த நிலையில், அபிவிருத்திச் சபைத் தேர்தலில் யு. என்.பி. தமிழனுக்குநான்காவது இடம் கொடுத்ததில் ஆச்சரியம் என்ன இருக்கிறது. பொத்துவில் 'புதுமுகம்' இனியாவது ஜே. ஆரைப் புரிந்து கொள்ள வேண்டும்.

# 'ஐஸ்' கட்டியாகும் அரசாங்கப்பணம்!

"அமைச்சரே! நாம் திட்டங்களுக்காக ஒதுக்கிற பணம் ஏராளம்! ஆனுல் அது, ஏழைகளின் கைக்குப் போய்ச் சேருவதில்லை என்கிருர்களே; எப்படி?"

மன்னன் மந்திரியைப் பார்த்துக் கேட்டான்!

அமைச்சர் சொன்ஞர் அழகான பதிலை; வார்த்தைகளால் மட்டுமல் ஒரு ஒருசிறு நிகழ்ச்சியை நடத்திக் காட்டி!

ஒரு ஐஸ் கட்டியை எடுத்து அரசன் கையில் அமைச்சர் கொடுத்தார் —

"அரசே! அதை இந்தக் கொலுமண்டபத்தில் உள்ள நமது பிரதானியர் அனைவரும் வாங்கி வாங்கி அடுத்தவர் கைக்குக் கொடுக்க வேண்டும், அப்படியே ஐஸ்கட்டி கைமாறிக் கொண்டிருக்க வேண்டும்"

அரசன், தன் கையிலிருந்த ஐஸ் கட்டியை தளபதியிடம் கொடுத்தான்.

தளபதி, துணைத்தளபதியிடம் கொடுத்தான்.

துணைத்தளபதி, தனக்கு அடுத்துள்ள அதிகாரியிடம் கொடுத்தான்.

ஐஸ்கட்டி அந்த மண்டபத்தை ஒரு சுற்றுசுற்றிவிட்டு அமைச்சர் கைக்கு வரும்போது ஒரு ஓட்டாஞ்சல்லிபோல இளைத்திருந்தது!

அமைச்சர் தன்கையில் அதைச் சிறிதுநேரம் வைத்திருந்து விட்டு — இறுதியாக இரண்டு மூன்று சொட்டுத் தண்ணீரை: அரசனின் கையில் ஊற்றினுர்.

அரசன், அதில் ஒருசொட்டை தனது நாவால் சுவை பார்த்துக் கொண்டான்!

இப்போது புரிகிறதா மன்னு! பல பேர் கைமாறிய ஐஸ் கட்டி என்ன ஆனது? கடைசியாக ஒரு சொட்டுத் தண்ணீராகத்தானே ஆனது! இதே போலத்தான் ஏழை மக்களுக்காக அறிவிக்கிற திட்டங்கள் ஒரு சொட்டுக் கண்ணீராக மாறி அந்த மக்களின் உதடுகளை ஈரமாக்குகிறது.

உடன்பிறப்பே,

திட்டத் தொகைகள் அமைச்சர்களின் கரம்பட்டு— ஆளும்கட்சிப் புள்ளிகளின் கரம் பட்டு — அமைப்பாளர்களின் கரம் பட்டு அந்தோ: பரிதாபம்; கடைசியாகப் பாடுபடும் ஏழைகளின் விழிகளில் ஒருசொட்டுக் கண்ணீராக மிஞ்சுகிறது என்பதற்கே — இந்தக் கதை புரிகிறதா உனக்கு!

(கலைஞர் கருணுநிதி எழுதிய கடிதத்தின் ஒருபகுதி)

# தந்தை செல்வா

## வி. த. குமாரசாமி

பொறுமையில் தருமனுய்
பூமியிலே வாழ்ந்த மகன்
நிறைகுணத்தில் காந்தியைப் போல்
நின்ருெளிர்ந்த குண வாளன்
கறை படியா உள்ளத்தான்
கடவுள் வழி நின்று கொடுஞ்
சிறை யிருந்தான் தமிழுக்காய்
செல்வ நாயக மையா.

ஐயா உன் நாமம்
ஆண்டாண்டு மறவா மல்
மெய்யாய் எம் முளமெல்லாம்
மேவியே வாழ்ந் திருக்கும்
உய்ய வழி தமிழுக்கு
உளமாரக் காட்டிய நல்
பொய்யா மொழி யாளா
பூமுகமே என் வணக்கம்.

வானத்து நிலவுந்தன்
வதனம் காட்டும்
வளமான தமிழுந்தன்
வன்மை காட்டும்
தேனெத்த மழலை முகம்
உன்னில் காட்டும்
செந்தமிழர் குலவிளக்கே
செல்வா நீதான்.

தமிழீழம் காணவெனத்
தாகங் கொண்டு
தமிழ் வாழத் தூயவனுய்த்
தவித்து நின்று
தமிழ் மண்ணைக் காத்திடவே
அண்ணல் காந்தி
தந்தைவழி நின்ற தந்தை
செல்வா போற்றி.

# வேம்பிராயில் மாதிரிக் கிராமம்!

கோப்பாய்த்தொகுதிக்கான மாதிரிக்கிராமம் வேம்பிராயில் தான் அமையவுள்ளது. இது தொடர்பாக யாழ் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் வீடமைப்புத் திணைக்கள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு மாதிரிக்கிராமம் வேம்பிராயில் அமையவேண்டுமென்பதற்கான காரணங்களை எடுத்து விளக்கினுர்.

அமரர் திரு. சி. கதிரவேற்பிள்ளையினுல் சிபார்சு செய்யப்பட்ட இத்திட்டத்தினை வேறு கிராமத்துக்கு மாற்றவேண்டாமெனக் கோரி அறவழிப் போராட்டக்குழு கடந்த வாரம் பலத்த ஆட்சேபம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# திருக்குறள் மாநாட்டுப் பேச்சுப் போட்டிகள்

இவ்வாண்டு மே மாதம் 18ம் 19ம் திகதிகளில், அகில இலங்கைத் தமிழ் மணக்கழகம் தனது இருபத்தோராவது திருக்குறள் மாநாட்டை நயினுதீவில் கோலாகலமாகக் கொண்டாட விருக்கிறது.

மாநாட்டையொட்டி, 19.5.1981 அன்று முறையே 12 வயதுக்கும், 15 வயதுக்கும் 20 வயதுக்கும் உட்பட்ட இரு பாலாருமடங்கிய கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு ஆகிய முப்பிரிவினரிடையிலும் தனித்தனியான பேச்சுப் போட்டிகள் நடாத்திப் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்குவதென மாநாட்டுக்குழு முடிவுசெய்துள்ளது. 19. 5. 81 அன்று 20 வயதுக்கு மேற்பட்டவர்களிடையே எழுந்தமானப் பேச்சுப் போட்டியொன்றும் நடாத்தப்படவுள்ளது.

இப்போட்டி தொடர்பான மேலதிக விவரங்கள் வருமாறு;

போட்டிகள் நடாத்தப்படவுள்ள தேதி: 09. 05. 81 காலை 10.00 மணி.

நடாத்தப்படவிருக்கும் இடம் நயினுதீவு மகாவித்தியாலயம்

விண்ணப்ப இறுதித் திகதி: 30. 04. 81

போட்டித் தலைப்புகள்

கீழ்ப்பிரிவு - திருவள்ளுவர் (5 நிமிடப்பேச்சு)

மத்தியபிரிவு - குறள்காட்டும் வாழ்க்கை நெறி (7 நிமிடப்பேச்சு)

மேற்பிரிவு - "வள்ளுவன்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத்தின் சொத்து தந்தை செல்வா!

ஒவ்வொரு தமிழ் மகனும் நன்றியுணர்வுடன் நினைவு கூரத்தக்க பெருமகன் தந்தை செல்வா. ஈழத்திருநாட்டின் வரலாற்றில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க அத்தியாயத்தைத் தோற்றுவித்த சரித்திர நாயகன் தந்தை செல்வா. நாடு வாழ இனம் விடுதலை பெற தனது சிந்தனையையும், சிறப்புமிக்க செயலையும் செலவிட்ட கர்மவீரன் தந்தை செல்வா. உருவத்தால் எளிமையாக காட்சி தந்தாராயினும் உறுதிமிக்க உள்ளத்தால், தெளிவுமிக்க உணர்வால் பெரியவராகி பலராலும் போற்றத்தக்க தலைவராகி உலகில் வாழும் தமிழ் மக்களின் இதயத்தில் என்றும் நிலைத்து நிற்கும் மாமேதையாகியவர் தந்தை செல்வா.

தமிழகத்திலே தந்தை என்றால்--- வெண்தாடிவேந்தர் பெரியாரின் நினைவும், அவர் ஊட்டிய பகுத்தறிவுக் கொள்கையும் நம் நினைவில் நிலைத்து நிற்பதைப் போல், ஈழத்திருநாட்டில் (புலர இருக்கும் புதிய பொன்னாட்டில்) தந்தை என்றால்--- அந்த மெலிந்த உருவத்துக்கும் நிமிர்ந்த நடைக்கும், துணிந்த நெஞ்சுக்கும் சொந்தக்காரரான செல்வாவின் நினைவு வருவது இயற்கை. சாதிவேறுபாடற்ற தமிழ்ச்சமுதாயத்தைக் கட்டியெழுப்ப தன்னலமற்ற சேவை செய்த அப்பெருந்தகை நீண்ட துயில் கொண்டு ஆண்டுகள் நான்கு உருண்டோடிவிட்ட இன்று அவரின் ஆற்றல்மிக்க

**தந்தை செல்வா நினைவு நாள் ஏப்ரல் 26**

சொல்லையும் துணிவுமிக்க செயலையும், சுயநலமற்ற தொண்டையும், பகைவரும் பாராட்டும்படிப்பினைநிறைந்த வழிமுறையையும் நினைவு கூருவது நமது தலையாய கடமை! 18-12-1949 இல் தோற்றுவிக்கப்பட்ட தமிழரசுக்கழகம் என்ற இயக்கத்தை கட்டுப்பாடான அமைப்பின் கீழ் கொண்டுவந்து செயல்படவைத்து இறுதிமூச்சு அடங்கிய 26-4-1977 வரை அவர்வாழ்வில் இடம்பெற்ற வரலாற்றுச் சம்பவங்கள் பல- அவற்றுள் இரண்டொன்றைத் தொட்டுப் பார்ப்போம்-

1954-ஆம் ஆண்டு எலிசபெத் மகாராணியார் இலங்கை வந்தபோது கொழும்பு சுதந்திரசதுக்கத்தில் சிம்மாசனப் பிரசங்கம் நிகழ்த்திக் கௌரவித்தார்-அதற்கு நன்றி தெரிவிக்கும் உரையை திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன சிங்களத்திலும்- ஆங்கிலத்திலும் மட்டும் நிகழ்த்தி தமிழைப் புறக்கணித்து---- அவமதித்து, தமிழர்களின் வெறுப்புக்கும் உள்ளக்குமுறலுக்கும் அன்றே ஆளாகியதை நாடு மறப்பதற்கில்லை! அது கண்டு மொழிக்கு நேர்ந்த இழிவைத்துடைக்க கொதித்து எழுந்து எதிர்ப்புக் குரல் எழுப்பி நாட்டுக்குஉணர்த்திய அவரின் தன்மான உணர்வை நாம் மறப்பது நன்றிகொன்ற செயலாகும்.

1956-ஆம் ஆண்டு திரு- பண்டாரநாயக்கா நாடாளுமன்றத்தில் கொண்டு வந்த தனிச்சிங்கள மசோதாவுக்கு எதிராக சத்தியாக்கிரகப் போராட்டம் நடாத்த முடிவு செய்து முதல்நாள் இரவு முழுவதும் கொழும்பில் இருந்த ஒரு பத்திரிகை அலுவலகக் கட்டடத்தில் கட்டளையை எதிர்பார்த்து காத்து இருந்தோம். நீண்ட நேரம் சிந்தித்து பரிசீலனை செய்த பின்பு என்ன எதிர்ப்பு ஏற்



பட்டாலும், எந்த சட்டம் குறுக்கிட்டாலும் அஞ்சாமல் நாளை காலிமுகத்திடலில் போராட்டத்தை நடத்தியே ஆக வேண்டும் என்ற முடிவான முடிவினை வெளியிட்ட தந்தை செல்வாவின் துணிச்சலை இன்றும் நாம் மறப்பதற்கில்லை. அந்த சத்தியாக்கிரக அணிவகுப்பில் நான் கண்ட காட்சி---இனவெறியர்களினால் தன் கண்ணெதிரே தனது தனையன் நையப்புடைக்கப் படுகிறார். அடிதாங்கமுடியாமல் தள்ளாடிக் கீழே விழ நாங்கள் உதவிக்குச் செல்கிறோம். ''பிடிக்க வேண்டாம் விட்டுவிடுங்கள் நடப்பது நடக்கட்டும்'' என்று கூறி நிலைகுலையாது அமைதிகாத்து பொறுமை விரதம் பூண்ட அவரின் மனஉறுதியை இன்று மணக்கண் முன் கொண்டு வந்து நிறுத்திப் பார்க்கின்றேன்--- கண்கள் குளமாகின்றன!

தமிழ் இனம் தன்மானத்துடன் தலை நிமிர்ந்து வாழ இறுதிமூச்சு உள்ளவரை தொண்டாற்றிய தலைவனுக்குச் செய்ய வேண்டிய கைமாறுகள் பல உள. அதை நிறைவேற்றுவதுநமதுகடமை. அவர் தந்த இலட்சிய வேட்கை ஏற்றிய விடுதலை உணர்வு ஒவ்வொரு தமிழனின் (அவன் எங்கிருந்தாலும்) சிந்தையை விட்டும் தணியப்போவதில்லை, குறையப்போவதுமில்லை.

வாழ்க செல்வா---- வளர்க அவர் ஊட்டிய (விடுதலை) உணர்வு---!! வெல்க அவர் தம் இலட்சியம்.

— "கலையன்பன்"

# முதல்வர் எம். ஜி. ஆரின் முகத்தைக் காட்டி அரசு ஆதரவு திரட்டத் திட்டம்!

தமிழ்நாட்டிலே, அண்ணன் உருவாக்கிய இயக்கம் பிளவுபட்டு நிற்கிறது. தமிழுக்கும், தமிழனுக்கும் ஏற்றம் தர உருவாகிய திராவிடமுன்னேற்றக்கழகம், இன்று இரண்டாகி நிற்கின்ற காட்சி, தமிழ்கூறு நல்லுலகு முழுமையும் வேதனையுடன் விழிநீர் நிறைத்து நின்று காணும் காட்சியாகும். புரட்சித் தலைவரும், கலைஞரும் மோதிக் கொள்வதை தந்தையும் தாயும் சண்டையிடுவதைத் தவித்து நின்று காணும் பிள்ளைகளின் நிலையில் நின்றே நாம் மனவேதனையுடன் நோக்குகின்றோம். தமிழ்ஈழநாட்டின் முதல்வரை, சந்தர்ப்பத்தின் நெருக்கடியால் தன் வசமிழந்து புரட்சித்தலைவர் கடிந்து கூறியது மன்னிக்கக் கூடியது; மன்னிக்கப்பட வேண்டியது. உலகத் தமிழினம் என்பது ஒரு குடும்பம் என்ற உணர்வுடையவர்கள் முந்தியோ பிந்தியோ இந்த முடிவுக்குத்தான் வரமுடியும்.

சிங்கள இனவெறியரின் ஆட்சியோ, எறும்பை யானையாக்கிக் காட்டும் "பூதக்கண்ணாடிப் பிரச்சாரம் செய்து, எமக்கிடையே பூதாகாரமான பிளவை உண்டாக்கிவிடத் திட்டமிட்டுச் சூழ்ச்சி செய்கின்றது. 18-3-81-ம் தேதி வெளியான 'தவஸ' சிங்களப் பத்திரிகையில் பிரசுரமான ஒரு முன்பக்கச் செய்தியின் படி, புரட்சித்தலைவரை இங்கு அழைத்து நாடு முற்றிலும் கூட்டங்கள் நடத்த சிங்கள அரசு திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு அமைச்சர்ஜனப்ஹமீத் இதுவிடயமாக நடவடிக்கை எடுத்து வருவதாக அச்செய்தி கூறுகின்றது. மதுரைமாநாட்டிலே திரு.எம்.ஜீ.ஆர்.பேசிய பேச்சைத் திரித்து, வானொலி

## சிங்கள ஏடு 'தவஸ' தகவல்!

யிலும் பத்திரிகைகளிலும் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டு, திரு. எம். ஜீ. ஆருக்கும் ஈழத்தமிழருக்குமிடையில் கசப்புணர்வை உருவாக்கிவிடச் சிங்கள ஆட்சி செய்த முயற்சியைப் பின்னணியில் வைத்துப் பார்க்கும்

*************

**நா.சிவராசசிங்கம்**

*************

போது, திரு. எம். ஜீ. ஆரைக் கவர்ச்சிப் பொருளாகவும், காட்சிப் பொருளாகவும் கூட்டங்களில் இருத்தி, அவரின் பொருட்டுத் திரளும் ஜனசமுத்திரத்தின் மத்தியில் அரசாங்க ஆதரவுப்பிரச்சாரம் செய்வதற்கும், அவர் பொதுவாக நிகழ்த்தக்கூடிய உரைகளுக்கு தமக்கு வசதியான முறையில் அர்த்தங்கற்பித்துப் பிரசுரிக்கவும், வானொலியில் ஒலிபரப்பவும், எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த அரசை ஆதரிப்பவராகவும் அங்கீகரிப்பவராகவும் அவரைக் காட்டவும் இந்த நயவஞ்சக ஆட்சி திட்டமிட்டுள்ளது என்பது தெளிவானது.

அன்று—

திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனரும் அமைச்சராக இருக்க, யூ. என். பீ. அரசுஆண்டிருந்த வேளையில், அண்ணா முதல்வராஞர். அவர் இலங்கை வருவதற்கும் விரும்பினார். அண்டை நாட்டின் மாநிலமுதல்வர் இந்த நாட்டுத் தமிழர் லட்சக்கணக்கானோரின் இதயங்கவர்ந்த தலைவன் என்ற முறையில் அண்ணாவுக்கு இலங்கை வருமாறு அழைப்பு விடுக்கவில்லை யு.என்.பிஆட்சி. அண்ணாவுக்கு அழைப்பு விடுக்காத ஆட்சியாளர், முதல்வராகி இத்தனை ஆண்டுகள் கழியும்வரை தன்னையும் அழைப்பதற்கு எண்ணாதவர்கள், இன்று, திடீரென்று, அழைப்பு விடுக்கிறார்கள் என்றால் இதில் ஏதோ சூது இருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளாமல் விடமாட்டார் எம். ஜீ. ஆர்.

இலங்கையிலேதமிழனுக்குத் துன்பமென்றால், தமிழகத்தை உலுப்பி உஷார் படுத்திச் சிங்கள நரிகளைப் படுக்கவைத்தவன் காஞ்சித்தலைவன். அவனுடைய கூடாரத்திலே தரையில் கால்துடைக்க விரிக்கப்பட்ட சாக்கானாலும், அது தமிழுணர்ச்சியும் எழுச்சியும் கொண்டதாகவே இருக்கும். காஞ்சித்தலைவனின் பாசறையில் கற்றுவந்த புரட்சித் தலைவன், புரிந்து கொள்வான் பகைவர்களின் போக்கை. தெரிந்து கொள்வான் செந்தமிழர் நிலையை எனவும், ''தொழுத கையுள்ளும் படையொடுங்கும்'' சிங்கள ஆட்சியின் அழைப்பை நிராகரிப்பான் எனவும் நம்புவோமாக.

## பறவைகள் பலவிதம்; ஒவ்வொன்றும் ஒருவிதம்!

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வேலை இழந்தோர் தொடர்பாக கல ான எம். பி. பாராளுமன்றத்தில் கேட்ட கேள்விகளுக்கு இரண்டு அமைச்சர்கள் ஒருவிதமாகவும், இன்னொரு அமைச்சர்சார்பில் பிரதியமைச்சர் வேறுவிதமாகவும் நாடாளுமன்றத்தில் பதில் அளித்துள்ளனர்.

உள்துறை அமைச்சர் திரு. கே.டபிள்யூ.தேவநாயகமும் புடவைக் கைத்தொழில் அமைச்சர் திரு. விஜேபால மெண்டிசும் — 1980 யூலை வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டோர் என்று எவருமே தங்கள் அமைச்சின்கீழ் வேலை இழக்கவில்லை எனப் பதில் சொல்ல, பிரதி நீதி அமைச்சர் ஷெல்டன் ரணராசா, தமது அமைச்சின்கீழ் வரும் திணைக்களங்களில் 90 சத வீத மானோர் திரும்பவும் வேலையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள் எனப் பதில் கூறியுள்ளார்.

## சோதனையும் வேதனையும்

கந்தர்மடத்தைச் சேர்ந்த ஒரு ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியரும் அவரின் மகளும் வீட்டில் இருந்தபோது சிவில் உடையில் வந்த சிலர் குறிப்பிட்ட இருவாலிபர்களைப் பற்றி விசாரணை செய்துவிட்டு தந்தையையும் மகனையும் இம்சித்தனராம். கடுமையாகப் பாதிக்கப்பட்ட இருவரும் யாழ் பா. உ. திரு. வெ யோகேஸ்வரனிடம்- புகார்செய்ததைத் தொடர்ந்து பா. உ. அவர்கள் வடபிரதேச டி. ஐ. ஜி. பி. யிடம் புகார் செய்துள்ளனர். (ஈழநாடு15-4-81)

## ஆயுதப்படைக்கு மீண்டும் சம்பள உயர்வு

ஆயுதப்படையினருக்கு சம்பள உயர்வு வெகுவிரைவில் இடம்பெறும்.

(அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க
தினகரன் 17-4-81)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேர்தல் தேவையில்லாத தொன்று--

நாடாளுமன்றப்படிகளில் ஏறிஞல்-- நமது விடுதலைப் போராட்டத்திலிருந்து படியிறங்க வேண்டும்--

இன ஒற்றுமைக்குத் தேர்தல் இடையூறு விளைவிக்கின்றது--

மாவட்டசபை ஒரு மாயமான்--

தேர்தல் பகிஷ்கரிப்பே இன்றையத் தேவை--

இப்படி-- ஏதேதோ எண்ணங்களை எடுத்தெறிந்தோர்--

ஆசைகளை அறுத்தெறிந்த முனிகள் நாங்களே என்று ஆர்ப்பரித்தோர்--

# பகிஷ்கரிப்பு பட்டாஸ்!

விடுதலைப் போராட்டக்களத்தில் குதித்துவிட்ட நாங்கள்-- வீணை தேர்தல் கூத்து ஆடுவோமா என விணுக்கணை தொடுத்தோர்--

சிங்களப் பாராளுமன்றத்தை விட-- சிறைச்சாலையே மேல் என சிறுத்தையாய்ச் சீறியோர்--

கோப்பாய் வெற்றிடமானதும்-- குதியாய்க் குதித்தார்கள்!

வன்னியசிங்கத்தின் தொகுதி அது-- அவரது வாரிசு நானே என்றது ஒரு தீவிரம்!

கதிரவேற்பிள்ளையின் காலடி பற்றி நடக்கக் கூடியவன் நானே- அதஞல் அவர் அமர்ந்திருந்த கதிரை எனக்கே சொந்தம் என்கிறது இன்ஞெரு 'தீவிரம்'!

திசைக் கொருவராய் நின்று இந்தத் தீவிரங்கள் கோப்பாயைக் கூறு போடுவதில் குறியாயிருந்து குப்புற வீழ்ந்து கிடக்கையில்

மாவட்ட சபையிலும் ஒரு மல்யுத்தம் நடைபெற்றது-

சுதந்திரம் மட்டும்தான் தேவை என்று சொன்ன ஒரு தீவிரம்-இப்போது சோறும் வேண்டும் என்கிறது.

சோற்றைத் தரக் கூடிய அபிவிருத்தி வேலைகளை சுறு சுறுப்பாக என்ஞல் கவனிக்க முடியும் என்கின்றது அது.

களத்தில் மட்டுமே என் கால்கள் நிற்கும் என்ற இன்ஞெரு தீவிரம்-- களம் என்ருல் நெற்களத்தையும் குறிக்காதா என்று இப்போது கதை விடுகிறது.

பசிக்கின்ற வயிற்ருேடு பகைவனை எதிர்த்துப் போரிட முடியுமா? பசிவந்தால் பத்தும் பறந்து போகுமே என்ற பழமொழியைத் துணைக்கழைக்கிறது இன்ஞெரு அதிதீவிரம்!

விடுதலையும் அபிவிருத்தியும் இரண்டு விழிகள் -- ஒரு விழியில் சுண்ணமும் மற்ற விழியில் வெண்ணெய்யும் தடவ நான் என்ன முட்டாளா என்று நம்மிடமே கேள்வி கேட்கிறது வேறு ஒரு தீவிரம்!

தலைமைமீது தாங்க முடியாத தனிப்பட்ட கோபம்-- அதைத் திட்டவே 'தீவிரம்' பேசினேன் என்று 'பாவசங்கீர்த்தனம்' செய்கிறது மற்றுமொரு தீவிரம்

இந்தியாவின் சுதந்திரத்துக்காகப் போராடியோரில் எத்தனையோபேர் தேர்தலில் ஈடுபட்டு பதவி நாற்காலிகளை அலங்கரிக்கவில்லையா? இதஞல் அந்நாடு சுதந்திரம் பெருமலா் போய்விட்டது?

அகில இந்தியக் காங்கிரஸின் அக்கிராசனர் பதவிக்கு தீவிரவாதி சுபாஸ் சந்திரபோஸ் போட்டியிடவில்லையா? என வரலாற்றைக்காட்டி வாய் நீளமும் காட்டுகிறது அடுத்து ஒரு ''தீவிரம்''!

தமிழ் ஈழத் தேசிய இனத்தின் விடுதலைக் குரல் என விளம்பரப்படுத்திக்கொள்ளும் ஒரு பத்திரிகை--

கோப்பாயில் யாரோ ஒருவர் தேர்தல் பாய்விரிக்க மறைமுகமாக வேலை செய்வதாகவும் சொல்லப்பட்டது.

தீவிரம் பேசிய அப்பத்திரிகையே திசைமாறிய பிறகு நாங்கள் எம் மாத்திரம் என்கிறது புதிய ஒரு தீவிரம்!

இப்படி-- தீவிரம் பேசியோரெல்லாம்-- தேர்தல் எனும் தேனைச் சுவைக்கப் படும்பாட்டை தமிழீழம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது.

**தேர்தல் தேஞகவும் இனிக்கலாம் -- தேளாகவும் கொட்டலாம் என்பதை இவர்கள் தெரிந்து வைத்தால் நல்லது.**

தமிழர்களெல்லாம் ஏமாளிகள் -- அவர்களைத் தருணத்கேற்ப தலையாட்ட வைத்துவிடலாம் என்று திட்டமிட்டுப் பணியாற்றும் இந்தத் தீவிரவாதிகளின் சாயம் நன்ருக சலவை செய்யப்பட்டு வெளுக்கத் துவங்கிவிட்டது.

வீரம் பேசிய அவர்களின் வாய்கள் வேட்பாளராக என்னை நியமித்தால் என்ன என்று கெஞ்சுகின்றன.

போராட்டம், போராட்டம் என்று புலியாக உறுமியவர்கள் -- இப்போது ஏதோ ஒன்றுக்காக எலியாக ஓடுகின்ருர்கள்.

ஆக-- தேர்தல் பகிஷ்கரிப்பு தெருவிலே வீசியெறியப் பட்ட பட்டாஸாகப் போய்விட்டது.

**வீதியிலே...... அதோ...... அந்தச்** சத்தம்...... **படார்...... படார்......படார்...**

குழந்தைகள் கைகொட்டிச் சிரிக்கிருர்கள்!

## ஆசிரியர் பேசுகிறார்

## த. வி. கூட்டணி தேர்தல்நிதிக்குழு

மேற்படி குழுவில், தலைவர் மு. சிவசிதம்பரம், பா. உ. திரு. வி. தர்மலிங்கம் பா. உ, திரு. இரா. சம்பந்தர் பா. உ, திரு.வி.யோகேஸ்வரன்பா.உ, திரு.த.சிவசிதம்பரம், பா. உ, ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

## த. வி. கூட்டணி வேட்பாளர் நியமனக்குழு

மேற்படிக்குழுவில், இயக்கத் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம், பா. உ, செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், பா. உ, திரு. வி. தர்மலிங்கம், பா. உ, திரு. இரா. சம்பந்தர் பா. உ, திரு. நா. த.செல்லத்துரை, டாக்டர் ஆ. உதுமா லெவ்வை, திரு. பொ. வ. கந்தையா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

டாக்டர் ஆ. உதுமாலெவ்வை, திரு.பொ.வ. கந்தையா இருவரும் வெளிநாடு சென்றிருப்பதால் இவர்களுக்குப் பதிலாக (தற்காலிகமாக) திரு. த. சிவசிதம்பரம், பா. உ, திரு. பூ.கணேசலிங்கம் பா.உ. நியமிக்கப்பட்டுள்ளனர்.

## மீண்டும் வேலை நிறுத்தம்!

சம்பள உயர்வு- போனஸ் நிரந்தர நியமனம் முதலான கோரிக்கைகளை முன்வைத்து யாழ்மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த நூறு ஊழியர்கள் நேற்று முதல் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர். இதில் கோண்டாவிலிலுள்ள மூன்று தொழிற்சாலை ஊழியர்களும் கலந்து கொண்டனர். சுலோக அட்டைகளுடன் யாழ் மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகாமையில் உள்ள அலுவலகத்திற்கு முன் இருக்கும் இவர்களை யாழ்-மாநகர பிதா திரு. இரா. விஸ்வநாதன் சந்தித்து நிலைமையை அறிந்தார். பெருமளவில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

# 'தினபதி'பாதையில் செல்வதுதான் தீவிரவாதமா?

ஐயா,

தங்கள் 12-4-81ல் வெளியான சுதந்திரனில் மக்கள் மதிப்பு வைத்திருக்கும் த.வி. கூட்டணித் தலைவர்களில் ஒருவரான ஒரு கல்விமானைப் பற்றி மிகக் தரக்குறைவாக எழுதியிருந்தது பார்த்து வேதனைப்பட்டோம். உங்கள் பத்திரிகையின் தரம் எவ்வளவு குறைந்து கொண்டு போகிறது என்பதைத்தான் அறிய முடிகிறது.

''கற்ருேரைக் கற்ருேரே அறிவர்'' அவரின் பட்டங்களைப் போட்டீர்கள். என்ன அந்தக் கல்விமானின் பட்டம் விலைகொடுத்தா வாங்கப் பட்டது?

மேலும் ஆயுட்காலத்தலைவர் என்றீர்களே, ஆசிரியரே! ஒன்று கேட்கிறேன். தந்தை செல்வா அவர்கள் தமிழரசுக் கட்சி தொடங்கிய காலம் தொட்டு த. வி. கூட்டணி உருவாகிய காலம் தொட்டு இறுதி மூச்சுவரை தலைவராக இருந்தாரே! இவரும் ஆயுட் காலத் தலைவர் என்று ஏன் எழுதவில்லை?

தமிழன் இன்று எப்படி ஒன்றுபட வேண்டும் என்பதற்கு ''லண்டன் முரசு'' எவ்வளவு எடுத்துக்காட்டு என்பதை அறிவீர்கள்.



## உள்ளம் திறந்து...

தலைவர் அவர்தான், இவர்தான் என்பது முக்கியம்அல்ல. சிந்தனையும், செயலும், கால கட்டத்தில் வாழும் மக்களின் அபிலாசைகளுமே முக்கியம். தலைவரை ஆக்குதல், நீக்குதல் உங்களாலோ என்ஞலோ முடியாது. அதற்குத் தமிழ்மக்கள் எவ்வளவு வளர்ந்துள்ளார்கள் என்பதை நீங்கள் அறியாமல் இருப்பதன் காரணம் புரியவில்லையே!

உங்கள் தனிப்பட்ட கருத்து செவிக்கேறவில்லை என்பதற்காக உங்களைச் சுட்டிக்காட்டி விட்டால் இவ்வாறு குணம் கெட்டு எழுதுவது தர்மம் அல்ல. குணக்குன்றுகளுடன் பழகியும் நீங்கள் எழுதுவது வேதனைக்குரியது.

உங்கள் கொள்கை என்ன?

த. வி. கூட்டணியுடன் நீங்கள் இருந்த போது தினபதி கசந்தது --இன்று உங்களுக்கு இனிக்கிறது.

ஈழவிடுதலைக்கு குரல் கொடுக்கும் கோவை அண்ணு! அமைச்சர் திரு. இராசதுரை யார்? அவரின் கொள்கை என்ன? அவர் எந்தக்கட்சி? அவரின் பேச்சு சுதந்திரனில் வந்ததே! என்ன சொல்கிறீர்கள். என்ன கொள்கை பிசுபிசுத்தா போயிற்று?

கோவை அண்ணு!

இவ்வாறு பல கூறலாம். இன்னும் பலகேட்கலாம் நீங்கள் இப்போது யார்? உங்களின் இப்போதையபின்னணி என்ன? பா. உ. பதவிக்காக ஏங்கும் சில நரிகள் உங்களையும், உங்கள் பத்திரிகையையும் கருவியாக்கி வருகிருர்கள். என்பதை நீங்கள் அறிவீர்களா?

அதிகம் கூருமல் ஒன்றை மட்டும் கூறிவிடை பெறுகிருேன். நீங்களும் ஈழவிடுதலையை இதய சுத்தியுடன் விரும்பிஞல் அதனை ஒரு வேலைத் திட்டத்துடன் செயற்படுங்கள் உங்களைச் சுற்றுபவர்களை இனங்கண்டு கொள்ளுங்கள் அதைவிடுத்து கூட்டணியைத் தாக்கும் வேலைகளில் இயங்கி ஈழவிடுலையைப் பலவீனப்படுத்தாதீர்கள்.

சொல்லிலும் பார்க்க செயல் தான் முக்கியம்

இங்ஙனம்
**செல்வி யோ. தென்னரசி**
89. வவுனிக்குளம்.

## அங்கோடையில் இருந்தவர்களாம்

தற்போது சுகாதார சேவையில் முக்கிய இடங்களில் பணியாற்றுவோரில் பலர் முன்பு பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றவர்கள் என்று யு. என். பி. பாராளுமன்ற உறுப்பினர் திரு. எம். டி எச் ஜயவர்த்தஞ கருத்துத் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தமிழினத்திற்கு ஏற்பட்ட ஓர் பேரிழப்புக்குப்பின்- இரண்டுவார இடைவெளிக்குப் பின் இலட்சிய இதயங்களோடு உறவாடும் நிலை ஏற்பட்டமைக்கு மன்னிப்புக் கோருகிறேன். அமரராகிவிட்ட 'சின்னண்ணன்' இறுதியாக என்னைச் சந்தித்தபோது திரு. நவரத்தினம், திரு. யோகேஸ்வரன், திரு. சூசைதாசன் ஆகியோரும் கூட இருந்தனர். மார்ச் மாதம் 25ந் திகதி மாலை ஐந்தரை மணிக்கு மேலாகியும் எங்களை நிற்கும்படி வற்புறுத்திப் பாராளுமன்றக் கட்டிடத்திலுள்ள என் செயலாளரின் அலுவலகத்தில் மனம் விட்டு உரையாடிக்கொண்டிருந்தார். அதுவே அவருடன் எமது இறுதிச் சந்திப்பு என்று நாம் யாருமே கனவு தானும் காணவில்லை. தன் உடல் நிலை சற்றுத் திருந்தியிருப்பதாகவும் இந்த நேரத்தைத் தவறவிடாது இந்தியா சென்று காணவேண்டியவர்களைக் கண்டுவிடவேண்டுமென்று பிடிவாதமாகக் கூறினார். தனிமையாகச் செல்ல வேண்டாமென்று கூறியபோது மிகுந்த தன்னம்பிக்கையோடு பதிலளித்தார். கடந்த இரண்டாண்டுகளில் திருமதி இந்திரா காந்தியை நான் மூன்று தடவை சந்தித்து ஈழத் தமிழ் இனத்தின் நிலை, இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை, திருகோணமலைத் துறைமுகம் முதலிய பல விடயங்களை எடுத்து விளக்கிய விபரங்களை அவருக்குக் கூறினேன். சிலர் கற்பனை செய்வது போல நாம் யாரும் செல்ல மறுத்து அவர் பிரயாணத்தைமேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படவில்லை. நான் பேசியவற்றுக்கு மேலாகத் தானே கூறக்கூடிய சில விடயங்களையிட்டுத் தான் சென்றுபேச வேண்டுமென்று அவர் நம்பினார். அந்தக் கடமையை நிறைவேற்றும் பொருட்டே அவர் இந்தியா சென்றார். தமிழ் ஈழத்தை வென்றெடுப்பதற்காக நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி நாம் பல மணிநேரம் சேர்ந்து சிந்தித்தோம்.

அந்த நேரத்தில் அடுத்து வரவிருக்கும் மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தல் பற்றியும் நாம் உரையாடினோம். மாவட்ட அபிவிருத்தி சபைகள் பற்றி எப்பவோ எங்கேயோ அவர் கூறியதாகத் 'தினகரன்' செய்தி வெளியிட்டதாம்; அவர் அதை மறுக்கவில்லையாம்; எனவே அதுவே அவரது கருத்தென்று அவர் மறைந்த பின் 'சுதந்திரன்' முதற்பக்கத்தில் செய்தி வெளியிட்டது. தமிழினத்தைப் பிளவு படுத்துவதற்காகச் செய்திகளைத் திரித்து வெளியிட்டுச் சிங்கள ஏகாதிபத்தியத்தின் கருவிகளாக இயங்குவன ஏரிக்கரைப் பத்திரிகைகள் என்று தந்தை செல்வநாயகம் எப்போதும் கூறுவார். இன்று அந்த ஏரிக்கரைத் 'தினகரனும்', தினசரி என்று தந்தையின் வழிநடத்தலின் கீழ் இருந்த காலத்தில் 'சுதந்திரன்' பத்திரிகையால் வர்ணிக்கப்பட்ட 'தினபதி' யும்தான் இன்று சுதந்திரனின் வேதநூல்களாக விளங்குகின்றன. என்னே காலம்! அமரர் கதிரவேலுப்பிள்ளையை பொறுத்தவரை அவர் பத்திரிகைகள் பார்ப்பதில் நம்பிக்கையற்றவர் என்பதை அவரை அறிந்தவர்கள் நன்கு அறிவார்கள். அவர் மாவட்ட அபிவிருத்தி சபைகள் பற்றி ஏதோ கூறியதாகத் 'தினகரன்' செய்தி வெளியிட்டிருந்தால் அதை அவர் பார்த்தே இருக்கமாட்டார். அவர் மறுக்கவில்லை, எனவே அதுவே அவர் கருத்து என்று சுதந்திரன் கூறுவது மறைந்த தலைவருக்கு இழைக்கப்படும் அபவாதம் ஆகும்.

மாவட்ட அபிவிருத்தி சபைகள் தமிழ் ஈழ இலட்சியத்திற்குக் கேடு விளைவிப்பவை என்று அவர் கருதியிருந்தால் தன் வைத்தியத்தொடர்ச்சியையும் முறித்துத் திருவனந்த புரத்திலிருந்து பறந்துவந்து அச்சட்டத்திற்காக வாக்களித்திருப்பாரா? பொதுச்சபை முடிவெடுத்த பின் அதை எல்லோரும் ஏற்றுச் செயற்பட வேண்டுமென்று கூறியிருப்பாரா? அவர் மாவட்ட அபிவிருத்தி சபைகளைப் பாராளுமன்றத்தில் ஆதரித்து வாக்களித்ததும் பொதுச்சபை முடிவுக்கு எல்லோரும் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்று அவர் கூறியதும் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்தனவே. அவற்றை அவர் மறுக்காதது மாத்திரமன்றி அவை பதிவில் இடம் பெற்ற உண்மைகள் என்பதை இலட்சிய இதயங்கள் எல்லாம் அறிவார்கள். இவை உண்மையா? சுதந்திரனின் புதிய 'வேதம்' தினகரன் எப்போதோ வெளியிட்ட செய்தி உண்மையா? அவரவர் மனச்சாட்சியின் தீர்ப்புக்கே விட்டுவிடுகிறேன்.

வெளிநாடு சென்று தமிழ்ஈழ விடுதலைக்கு அந்நாடுகளின் ஆதரவைத் திரட்டவேண்டுமென்பதே அமரரின் ஒரே சிந்தனை என்பதை எல்லோரும் அறிவர். எந்த நாடும் ஒரு விடுதலை இயக்கத்திற்கு ஆதரவு தருமுன் அந்த இயக்கத்திற்கு மக்கள் ஆதரவு உண்டா என்பதையே ஆராயும். மக்களின் ஆதரவில்லாத ஓர் இயக்கத்திற்கு உதவிபுரிய எந்த நாடாவது முன்வருமா? மக்கள் ஆதரவுண்டென்பதை உலகின் முன் நிலைநாட்ட வழி என்ன? 1977-ம் ஆண்டுத் தேர்தலில் மக்கள் தமது ஆதரவைத் தந்தனர். இப்போது மக்கள் மனம்மாறி விட்டனர் என்று ஆட்சியாளர் 1979 இல் கூறினர். 1979 மே மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்ஈழம் எங்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி பெற்ற வெற்றி ஆட்சியாளரின் கூற்றைப் பொய்யாக்கியது. எனினும் சாவகச்சேரியில் கிடைத்த இரண்டு இடங்கள், பருத்தித்துறையில் கிடைத்த ஒரு இடம், யாழ் மாநகர சபையில் கிடைத்த வாக்குகள் இவற்றைக் கொண்டு தமிழ் மக்கள் மத்தியில் தமக்கும் ஆதரவு உண்டென்று ஆட்சியாளர் உரக்கக் கூவினர். தெளிந்த சிந்தனையாளரான திரு. கதிரவேலுப்பிள்ளை இவற்றையெல்லாம் நன்குணர்ந்திருந்தார். அடுத்து வரும் மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தலில் ஐக்கியதேசியக்கட்சி தமிழ் ஈழத்தில் வெற்றி பெறுமானல் தமிழ் மக்கள் தமிழின விடுதலை இயக்கத்தை ஆதரிக்கின்றார்கள் என்று உலகம் ஏற்றுக்கொள்ளுமா? எந்த நாடாவது எமக்கு உதவிதர முன்வருமா? இதை அறிந்துதான் சிந்தனைச்சிற்பி எம்மோடு இறுதியாக உரையாடியபோது தெளிவாக ஒன்றைக் கூறினார். "எமக்கிடையில் உள்ள வித்தியாசங்களை மறந்து தமிழ்ஈழத்திலுள்ள அத்தனை மாவட்ட அபிவிருதது சபைகளையும் நாம் இத்தேர்தலில் கைபபறற வேணடும" என்று உறுதியாகக் கூறினா. அமரா கதிரவேலுப்பிள்ளை தமது வெளிநாட்டுப்பயணத்தின் நோக்கம் நிறைவேறுவதற்கும், ஈழதத'மிழ் தேசிய இனத்தின விடுதலை உறுதியை உலகம் உணருவதற்கும் இது அத்தியாவசியம்என்று திட்டவட்டமாக எமமிடம் கூறினர். அவருடைய மறைவையும் எம்மைத் தாக்குவதற்கு ஓர் சந்தர்ப்பமாக எண்ணும் எமது அன்பர்கள் இந்த அப்பட்டமான உண்மையை இப்போதாவது உணர்வார்களா? தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று வாதாடி, இயககத்தைப் பலவீனப்படுத்துவதற்குத் 'தினகரனும்' 'தினபதியும்' கூறிய, கூறும் 'சத்திய' வார்த்தைகளைச் சான்ருக்கித், தந்தை கட்டி வளர்த்த இயக்கத்தைத் தந்தை உருவாக்கிய பத்திரிகை உடைக்க முற்படும் வேதனைக்கு முற்றுப்புள்ளி வைப்பார்களா? இலட்சககணக்கான இலட்சிய இதயங்களில் இந்தப் புத்தாண்டு நாட்களில் மேலோங்கி நிற்கும் சிந்தனை இதுவொனறேயாகும்.

# புதிய 'வேதப்' புத்தகங்கள்!

தேதலைப் பகிஷ்கரிப்பது பற்றியும் சிலர் பொறுப்பற்றுப் பேசுகின்றனர். 1931-ம் ஆண்டு அரசாங்கசபைத் தேர்தலைத் தீவிர சுதந்திர உணர்ச்சியால்உந்தப்பட்ட யாழ்ப்பாண வாலிபர் மகாநாட்டின் வழிநடத்தலின் கீழ் வடபகுதி மக்கள் பகிஷ்கரித்தார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து யாரும் நியமனப்பத்திரங்கள் கொடுக்காது முற்ருகத் தடுக்கப்பட்டனர். அதையே சிங்களப்பேரினவாதம தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முற்பட்டது. மீண்டும் தேர்தலை நடத்தச் செய்யும முயற்சியில் மூன்று ஆண்டுகளாகத தமிழ்த்தலைவர்கள் ஈடுபட்டனர். 1934-ம் ஆண்டிலே தான் மீண்டும் தேர்தலை நடாத்தச் செய்து சட்டசபை சென்றனர். 1972-ம் ஆண்டு புதிய அரசியல் அமைப்புக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் பொருட்டு தந்தை செல்வா தனது காங்கேசன்துறை உறுப்பினர் பதவியை விட்டு விலகினார். இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகத் தேர்தலை நடத்தாது அரசு பின்போட்ட போது அந்தத் தேர்தலை நடத்தச் செய்ய வேண்டுமென்று தந்தை எவ்வளவு பாடுபட்டார் என்பதை அவருடன் நெருங்கி உழைத்தவர்கள் அறிவார்கள். தேர்தல் பகிஷ்காரம் மாவோவின் சிந்தனைக்கு ஏற்றதாயிருக்கலாம். ஆனல் நிச்சயமாக அதுவல்ல தந்தையின் சிந்தனை என்பதை "நாற்பதாயிரம் கோயிலிற் செப்புவேன்."



தமிழ் ஈழத்தில் நம்பிக்கையற்ற மாவோவின் சீடர்கள் சிலர் எவ்வளவுதான் தமிழ்ஈழம் பற்றிச் சந்தர்ப்பவாதமாக உரக்கக் கத்தினலும் தந்தை செல்வாவின் வழியில் நடப்போர் அவர் திரும்பத் திரும்பக் கூறியபடி மக்கள் சக்தியைத் திரட்டி, மக்கள் ஆதரவை உலகின் முன் நிலைநாட்டி, உலக நாடுகளின் ஆதரவைப் பெற்று எமது சுதந்திரத்தைப் பெறுவதே மார்க்கமென்பதை உணர்வர். மக்கள் ஆதரவு என்றும் ஒரே நிலையில் நிற்பதல்ல. இயக்கத்தின் கட்டுக்கோப்புக் குலையாமல் பாதுகாப்பதிலேயே மக்கள் ஆதரவை ஒரு நிலையாக வைத்துக் கொள்ளலாம். இதை உணர்ந்தே அமரர் கதிரவேலுப்பிள்ளை தான் மாவட்ட அபிவிருத்திசபை மசோதாவுக்கு வாக்களிக்கத் தவறினல் விஷமிகள் அதனை இயக்கத்தின் கட்டுக்கோப்பை உடைப்பதற்குப் பயன்படுத்துவார்கள் என்று கருதி இந்தியாவிலிருந்து பறந்து வந்து வாக்களித்தார். இறுதியாக இந்தியா பறப்பதற்குமுன் "மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் தமிழ் ஈழம் முழுவதும் நாம் வெற்றிபெறக் கூடியதாக வேற்றுமைகளை மறந்து உழைப்போம்" என்று கட்டளையிட்டுச்சென்றார். தமிழ்ஈழ சுதந்திரம் எமது கொள்கை; தமிழர் விடுதலைக் கூட்டணி எமது இயக்கம்; கூட்டணியின் அமைப்பே எமது தலைமை- இந்த உணர்ச்சியோடு செயற்பட்டு தமிழ்தேசிய இனத்தின விடுதலையைத் தந்தை செல்வா காட்டியவழியில் காண்பதே மறைந்த சிந்தனைச்சிற்பிக்கு நாம் அளிக்கும் கைமாருகும்.

# அண்ணன் அமரர்

## தனிநாடு கோருகிறது பஞ்சாப்

வடஇந்திய மாநிலமான பஞ்சாப்பில் பெரும்பான்மையினர் சீக்கியர்கள். இவர்கள் "காலிஸ்தான்" என்ற பெயரில் தனிநாடு கோரி போராடத் தயாராகவுள்ளார்கள்.

பஞ்சாப்பில் அகாலிதளம் கட்சியில் இருந்து பிரிந்து சென்று தனிநாட்டுக் கோரிக்கையைப் பிரகடனப்படுத்தியுள்ளனர், அத்தோடு மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமும் நடத்தியுள்ளார்கள்.

காலிஸ்தானுக்கு அங்கீகாரம் வழங்கும்படி ஐ.நா.சபையைக் கோரவும் தீர்மானித்துள்ளனர். இதன்பின் இதன்தலைவரும் டெல்லி பா.உவுமான திரு. ஜகதேவ்சிங்கும், 12 தொண்டர்களும் இந்திய அரசால் கைதுசெய்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

---

## இரகசியப் பொலிஸ் குவிப்பு

கடந்த காலத்தில் நடைபெற்ற சில சம்பவங்கள் தொடர்பாக கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களுக்கு கொழும்பில் இருந்து இரகசியப் பொலிஸ் புறப்பட்டுள்ளதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ....கிராம யாத்திரை.... கிராம யாத்திரை..... கிராம யாத்திரை....

(4)

# வன்னி மண்ணில் வலம் வந்தபோது....!

ஒரு குடியேற்றத் திட்டத்தில் நடந்த மக்கள் சந்திப்பின் போது ஓரிளைஞர் தம் உள்ளக் குமுறலைக் வார்த்தைகளில் கொட்டினர்; அபிவிருத்தியையும் பேசினர்; அரசியலையும் தொட்டார் தமது குடியேற்றத்திட்டவீதி திருத்தப்படாததேன்? தபால் விநியோகம் இன்னும் தொடங்கப்படாததேன்? தம்மூரிலே தொண்டர், ஆசிரியரிருக்கத் தமது பாடசாலைக்கு அயலூரிலிருந்து ஏன் ஒருவரை நியமிக்கவேண்டும்? பொருத்தமான விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. சில அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்யட்டது.

பின்னர் அவர் சுதந்திரனின் எதிர்ப்பு; கூட்டணியிலிருந்து விலக்கப்பட்டோர், தமிழ் ஈழப்பிரகடனம் முதலியன பற்றியும் கேட்டார். மறுமொழிகூறப்பட்டதும் ஏற்றுக்கொண்டு தலைவர்களும் தொண்டர்களும் சென்ற வாகனத்தில் ஏறி அடுத்த ஊரில் நடைபெற்ற கருத்தரங்குக்கு அந்த இளைஞர் சென்ருர்.

அடுத்த ஊரிலே நடைபெற்ற கருத்தரங்கிலே அத்தொகுதிப் பா. ம. உறுப்பினரின் சிபார்சில் நியமனம் பெற்ற கிராமசேவையாளரைப் பயிற்சிக் காலத்திலே நிறுத்திவிட்டு வேருெருவர் நியமிக்கப்பட்டதைத் தடுத்து நிறுத்த அந்தப் பா. உ. ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? எனக் கேட்கப்பட்டது.

ஐ. தே. கட்சிக்காரர் தலையிட்டு விருந்துகள் நடத்திக் குளிர்த்தி போட்டுக் புதியவரை நியமிக்கச் செய்தனர். ஊழல் மலிந்த ஆட்சியில் பா. உ. என்ன செய்ய முடியும்? ப. நோ. கூ. சங்கம் நடத்திய பெற்ருேல் நிலையத்தைஎடுத்து ஐ. தே. க. அமைப்பாளருக்குக் கொடுக்கும் இந்த அரசு எதைத்தான் செய்யாதுஎன்று மறுமொழி கூறப்பட்டது.

இக்கருத்தரங்கிலே உள்ளூர் இளைஞர்களும் தொண்டர்களும் தலைவர்களும் பேசி முடித்துக் கூட்டம் முடியும் பொழுது தலைவர்களுடன் அயல் குடியேற்றத் திட்டத்திலிருந்து வந்த இளைஞர் பேச முன்வந்து ''நாங்கள் தேர்தலைப் பகிஷ்கரிப்போம்'' என்று கூறினர். எவரும் அவர் கூற்றை ஆதரிக்கவில்லை. பகிஷ்கரிப்புக்குரல் வேறெங்கும் எழும்பவில்லை.

இவர் இதற்கு முன் நடந்த இரு கருத்தரங்குகளிலே இந்தப் பகிஷ்கரிப்பைக் கூறிவிட முயன்ருர். முதாவது கருத்தரங்கில் அவருக்கு இடம் கொடுக்கப்படவில்லை. இரண்டாவது கருத்தரங்கிலே தேவையைப்பற்றிப் பேசிவிட்டுப் பகிஷ்கரிப்பைப் பற்றிப் பேசினுல் மக்கள் அனுமதிக்க மாட்டார்கள். எனவே பழைய கிராமத்தில் நடந்த கருத்தரங்கிலே பகிஷ்கரிப்பை வெளிப்படுத்தித் தம்மையும் தம்மைத் தூண்டியவர்களையும் திருப்திப் படுத்திக்கொண்டார்.

இவர் தாம் பேசிய பேச்சிலே பிரதேசவேறுபாட்டையும் தொட்டுக்காட்டினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ்குடாநாட்டிலே த. வி. கூட்டணியின் கிளைத் தலைவர் ஒருவர் சிலகேள்விகளைக் கொண்ட கடிதத்தைத் கொடுத்து மறுமொழி தருமாறு கேட்டார்; கலந்துரையாடலுக்கும் அவர்தான் தலைமை தாங்கினர்; அக் கேள்விகளை வேருெருவர் எழுதிக்கொடுத்தார், என்று பின்னர் தெரிய வந்தது. கேள்விகள் யாவும் வேறிடங்களில் கேட்கப்பட்ட கேள்விகளேயாகும்.

ஒருகருத்தரங்குக்குத் தொகையாக வந்திருந்த இளைஞர்கள் தங்கள் பா. உ. வந்தால்தான் கருத்தரங்கை நடத்தலாம் என்றனர். பின்னர் பண்பும் அன்பும் மிக்க அவர்களுடன் தலைவர்கள் கலந்துரையாடி அவர்களுடைய குறைகளை அறிந்தனர். அவர்களுடைய கிராமத்தில் ஐ. தே கட்சிகிளை ஒன்று தொடங்கப்பட்டது. அந்தக் கிளைமூலம் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்போவதாக அக்கிளையின் உறுப்பினர் சிலர் ஆரவாரஞ்செய்தனராம். இது தமிழர் விடுதலைக் கூட்டணியை மட்டுமே ஆதரித்து வந்த அந்தக் கிராமத்து இளைஞர்களுக்கு ஆத்திரத்தை உண்டாக்கியது. மின்சாரம் வழங்கலை உடனேகவனிப்பதாக ஒரு பா. உ. கூறியவுடன் அவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். ஐ. தே. கட்சியினரின் தலையீடின்றி உடனே மின்சாரம் வழங்க அந்தப் பா. உ. உதவிசெய்தார்.

ஒருதொகுதியில் கூட்டணி ஆதரவாளர் நிறைவுள்ள ஊரிலே கருத்தரங்கு நடைபெறவுள்ள இடத்தில் ஐ. தே கட்சி இளைஞர் இருவர் இரண்டுமூன்று கறுத்தக்கொடிகளைக் கட்டினர். இதனைக் கூட்டணி இளைஞா அறுக்க முயன்றபோது வாய்ச்சண்டை முற்றி மோதல் ஏற்படும் போலிருந்தது. அங்கு சென்ற தலைவர்களும் தொண்டர்களும் அவர்களைச் சமாதானப்படுத்தினர். ஒரு கறுத்தக் கொடியைப் பிடுங்கி எறிந்துவிட்டுக் கருத்தரங்கை நடத்தினர். கறுத்தக்கொடிகட்டிய இளைஞரின் மூத்த சகோதரர்கள் கூட்டணியைச் சேர்ந்தவர்களாம் அங்கு எவரும் தேள்வி கேட்க முன்வரவில்லை. ஐ. தே. கட்சியின் அக்கிர

மங்களையும் ஊழல்களையும் புறக்கணிப்புகளையும் தலைவர்கள் புள்ளிவிபரங்களுடன் விளக்கிப் பேசினர்கள்'

வவுனியாத்தொகுதியில் ஒரு பழைய கிராமத்துக்குச் செல்லும் வீதி மிகப் பழுதடைந்து கிடந்தது. இரு நாள்களுக்கு முன் அங்கு பெய்த மழை அந்த வீதியில் வாகனம் போகமுடியாத நிலைமையை உண்டாக்கிவிட்டது. அரும்பாடுபட்டு ஏறி இறங்கித் தலைவர்களும்தொண்டர்களும் அக்கிராமத்தைஅடைந்தனர். அக் கிரரமமக்கள் பாதைகளை அலங்கரித்துப் பூரணகும்பம் வைத்துத் தலைவர்களையும் தொண்டர்களையும் இரத்த பாசத்துடன் வரவேற்றனர். கண்ணகி அம்மாள் கோயில் வழிபாட்டின் பின் நடைபெற்ற கருத்தரங்கிலே அம்மக்கள் சார்பிலே பேசியவர்கள், ''நாங்கள் எல்லோரும் அன்றும் இன்றும் தமிழ்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் எங்கள் பா. ம. உறுப்பினர் சொல்வதன்படி செய்து வருகிருேம், நாங்கள் அரசியல் படிக்கத் தேவையில்லை, தலைமுறை தலைமுறையாகப் போக்குவரத்து வசதியின்றி இடர்ப்படும் எங்களுக்கு வீதிகளைத் திருத்தித் தரவேண்டும், பாடசாலையைத் தரமுயர்த்த வேண்டும், போக்குவரத்து வசதிவேண்டும்'' என்று கேட்டனர். அவர்கள் வஸ் ஓடும் வீதிக்குச் செல்லத்தக்கதாக இடையிலுள்ள இரண்டுமைல் வீதியைத் திருத்தித் தருவதாக வாக்குறுதி கொடுக்கப்பட்டது.

அந்த மக்களின் பண்பு நிறைந்த உள்ளமும் இன்முகமும் இரத்தபாசமும் அங்கு சென்றவர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. களைப்பை நீக்கிக் களிப்பளித்தன.

வவுனியாத் தொகுதியில் காட்டோடும் காய்ந்த குளங்களோடும் கல்லும் முள்ளும், குண்டும் குழியும் நிறைந்த பாதைகளோடும் எல்லையிலுள்ள சிங்களக் குடியேற்றங்களோடும் போராடும் ஊர்களை நேரில் பார்ப்பவர்களுக்குத்தான் அபிவிருத்தியின் அவசியமும் ஏன், முன்னீடும் நன்கு தெரியும்; அகதிகளின் அவல வாழ்வையும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் தொடர் புறக்கணிப்பையும் நேரில் காணலாம். அன்றியும்' வவுனியா திருக்கோணமலை, மன்னர் போன்ற மாவட்டங்களின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எத்தனை பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்க வேண்டும்; எவ்வளவு பணிகளைச் செய்ய வேண்டும் என்பவற்றையும் அறியலாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து தீவிரம், விடுதலை, போராட்டம், குத்துக்கரணம் படியேறல், மண்டியிடல், விலைப்படுத்தல் என்பவற்றைப் பற்றி அனல் பறக்கப் பேசுபவர்களையும் ஓசியில் எழுதுபவர்களையும் இந்தமாவட்டங்கள் அழைக்கின்றன. அங்கு சென்று அம்மக்களையும் தங்களைப்போல் வாழுதற்கு உதவி செய்து கொண்டு தங்கள்வீரப் பிரதாபங்களை இவர்கள் காட்டினுல் தமிழ்ஈழ விடுதலைக்கு உதவி செய்பவர்களாகலாம். தமிழ் மண்ணையும் காக்க உதவலாம். இத்தகையஅவசர அவசிய ஆக்கப் பணிகளிலீடுபடாமல் வெறும் சொற்போர் புரிவோர் உமிக் குத்திக் கை ஓய்பவர்களேயாவர்.

பல வசதிகளோடும் வாழும் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் அடிப்படை வசதிகளுமின்றி அல்லற்படும் வவுனியா மக்களுக்குப் பண உதவி செய்யப்படாதா? யாழ்மாவட்டப் பன்முகப்படுத்தப்பட்ட வ.செ பணத்திலாகுதல் ஒரு பகுதியைக் கொடுத்துத் தங்களைக் கைதூக்கிவிடக் கூடாதா? எனும் கேள்விகள் வவுனியாத் தொகுதியில் சில கருத்தரங்குகளில் எழுப்பப்பட்டன.

இவற்றுக்குத் தலைவர்கள் கொடுத்த மறுமொழியைச் சுருக்கித் தருகிருேம்.

யாழ்மாவட்டப் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டப் பணத்தில் கிளிநொச்சித் தொகுதிக்கு ஆண்டுதோறும் இலட்சக்கணக்கில் கொடுக்கிருேம். உங்கள் மாவட்டத்துக்கும் உதவமுயன்ருேம். இப்பொழுதுள்ள கட்டுப்பாடுகளால் அயல்மாவட்டத்துக்குப் பணஉதவி செய்யமுடியாதென திட்டம் நிறைவேற்றல் அமைச்சு தீர்ப்பளித்தது.' இதனுலே மனமிருந்தும் உங்களுக்கு உதவ முடியவில்லை.

மாவட்ட அபிவிருத்திச்சபைகள் நிறுவப்பட்டால் உதவ முடியும் என்றெண்ணுகிருேம். பிறநாடுகளிலுமிருந்தும் நீங்கள் பணஉதவி பெற வழி பிறக்கும். தலைவர்களின் இந்த மறுமொழி வசதிகளின்மையால் வாடிவதங்கும் அம்மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டியது.

## கற்குடாத் தொகுதித் தமிழர் கண்ணீர்!

கோப்பாய்க்கோமகன், சிந்தனைச் சிற்பி சி. கதிரவேற்பிள்ளை அவர்களை கல்நெஞ்சனை காலன் கவர்ந்து சென்றுவிட்டான் என்ற செய்திகேட்டு கற்குடாத் தமிழ்ஈழமக்கள் இரத்தக்கண்ணீர் வடிக்கிருர்கள். மாற்ருனிடம் மண்டியிடாத மாவடிவேம்பின் மானத் தமிழர் வேதனைத்தீயில் வெந்து கொண்டிருக்கிருர்கள். தான் ஏற்றுக்கொண்ட கொள்கைக்காக தன் தந்தையைக் கூட தேர்தல்களத்தில் எதிர்த்துப் போரிட்ட சரித்திரநாயகனை கதிரவேற்பிள்ளை ஐயாவினுடைய மறைவு இலட்சியவாதிகளுக்குப் பேரிழப்பு, விடுதலைவீரர்களுக்குப் பெருந் தவிப்பு; ஈழத்தமிழினத்திற்கு என்றுமே ஈடுசெய்ய முடியாத பறிகொடுப்பு.

தமிழர் சமூகத்தில் சாதியின் பெயரால் ஒதுக்கப்பட்ட மந்தைகளிலும் கேவலமாக மதிக்கப்பட்ட தாழ்ந்த தமிழரின் கண்ணீர் துடைக்க இப்பெருமகன் ஆற்றிய பணிகளை நல்ல இதயங்கள் என்றுமே மறவாது. ஈழத்தமிழினத்தில் பதவிக்கும், பணத்திற்கும், சுயநலத்திற்கும் விடுதலைஇயக்கத்தை அழிக்க முனையும் தலைவர்கள் மலிந்துள்ள நிலையில் சற்றும் இறுமாப்போ சுயநலமோ இல்லாமல் இயக்கத்தீர்மானங்களுக்குக் கட்டுப்பட்டு விடுதலையை நோக்கி தியாகத்தீயில் நீந்திச்சென்று கொணடிருந்த மனித மாமணி இவர். இந்தத் தலைவனின் இழப்பால் கண்ணீரில் குளித்துக் கதறியழும் அன்னுரின் குடும்பத்தினதும், சிறந்த தொண்டனை இழந்த வேதனையில் தவிக்கும் த. வி. கூட்டணித் தலைவர்களினதும். இதயத்தலைவனைப்பறிகொடுத்த துயரில் துடிக்கும் ஈழத்தமிழரினதும் சோகத்தில் எமது கிளையும் கலந்துகொள்கிறது. அத்துடன், அவரின் இலட்சியக்கனவை நனவாக்குவதே அவருக்கு நாம் செய்யும் நன்றிக்கடனுகும் என்பதை இத்தருணத்தில் ஈழநாட்டினரை எனது கிளை பணிவுடன் வேண்டிநிற்கிறது.

இவ்வாறு - மாவடிவேம்பு த. வி. கூ. கிளைச் செயலாளர் மா. பிள்ளையான் தங்களது ஆழ்ந்த வேதனையைத் தெரிவிக்கின்ருர்.


"உதயசூரியன்"
சந்தா விபரம்

இலங்கை

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | 60-00 |
| அரை ஆண்டு | 30-00 |

இந்தியா

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | 260-00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழரின் ஒரே நம்பிக்கை நட்சத்திரம் தமிழீழமே!

**அரு. கோபாலன்**
ஆசிரியர்- "மர்மம்"

இந்த ஆண்டு தந்தைசெல்வா அவர்களின் 83-வது பிறந்த ஆண்டாகும்.

நம்மிடையே இன்று அவர் வாழ்ந்து கொண்டிருக்கவில்லை என்றாலும்: அவர் வாழ்ந்த நாட்களின் வரலாறும், நமக்கு வழிகாட்டவைத்துள்ள கொள்கைகளும் இன்றும் ஒளியூட்டிக் கொண்டிருக்கின்றன; நமக்கு உயிரூட்டிக் கொண்டிருக்கின்றன. என்றும் ஒளியூட்டி, உயிரூட்டும் என்பதில் ஐயமில்லை.

எனவேதான், நானிலமெங்குமுள்ள நன்றியுள்ள தமிழர்கள் அவருடையபிறந்த நாளை, மார்ச் 31ம் தேதி தொட்டு எப்ரல் முடிய இனவுணர்ச்சித் திருநாளாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

தந்தை செல்வா வழியில் தளராது நடைபோட்ட இலங்கைத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொருளாளர் சிந்தனைச் சிற்பி கதிரவேற்பிள்ளை அவர்களின் திடீர் மறைவு; எதிர்பாராத இழப்பை ஏற்படுத்தி, எழுச்சியைக் குறைத்து விட்டதென்றாலும், தளர்ச்சி நேராவண்ணம் தன்மானத் தணல் அவியாவண்ணம், விடுதலை வெப்பம் தணியாவண்ணம் இருக்க தன்னலமறியா தந்தை செல்வா போன்றவர்களின் பிறந்த நாளை இன்னும் சிறப்பாகக் கொண்டாட கடமைப்பட்டிருக்கிறோம்.

விழா எடுப்பது என்பது விழா நாயகர்களுக்கு விளம்பரம் தேடுவதற்காக அல்ல; நாம் விழாமல் இருப்பதற்கே யாகும்

ஆனால், அதுவே நம் ஒரே வேலைத்திட்டமாக ஆகிவிடவும் கூடாது ஏனென்றால்—

தமிழகத்தில் தந்தைப் பெரியாரைப் போலவே தமிழீழத்தில் தந்தை செல்வாவும் தன் கடைசிமூச்சு நிற்கும்வரை தமிழின உரிமை மீட்புக்காகக் களத்தில் நின்றவராகும். தன்னுடைய நலத்தை, வளத்தை அனைத்தையும் தமிழ் நிலத்துக்காகவே அர்ப்பணித்தவராகும்

தந்தை பெரியாராவது தமிழக விடுதலைக் குறிக்கோளோடு சமய எதிர்ப்பு, கடவுள் மறுப்பு போன்ற கொள்கைகளையும் வைத்திருந்தார்.

தந்தை செல்வாவோ தமிழின உரிமை மீட்பைத் தவிர, வேறெந்த நோக்கமுமின்றி உழைத்தார்.

தந்தை பெரியாரும் கூட தமிழின விடுதலைக்கு, சமயமும் கடவுளும் தடைகளாக இருக்கின்றன என்று கருதியதால் தான் அவற்றை ஒழிக்கத்தலைப்பட்டார்.

ஆனால்,பெரியாரின் சீடர்கள் என்று சொல்லிக்கொள்வோரில் பலர், சங்கடமான தமிழின விடுதலைக் குறிக்கோளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, அவ்வளவு தொல்லை தராத கடவுள் மறுப்பையும், சமய எதிர்ப்பையும் மட்டுமே, இன்று முன்னுக்கு வைத்துப் பெரியாரிசம் பேசத்தொடங்கி விட்டார்கள்.

அதையும்விட பெரியாருக்கு விழாக்கள் எடுப்பதே அவர்களின் பெரிய வேலைத்திட்டமாகிவிட்டது.

இதைப்போல தமிழீழத்திலும் தந்தை செல்வாவுக்கு விழா எடுப்பதொன்றே அவருடைய சீடர்களின் வேலைத் திட்டமாகி விடக்கூடாது.

விடுதலை வீச்சுக்கு முன்பு அவர்பேச்சுக்களில் ஊடாடிய சமஷ்டிக்கொள்கை, பிரதேச சபை போன்ற தொல்லை தராத எல்லைகளிலேயே சுற்றிக் கொண்டு, விடுதலைக் கொள்கையைத் தளர விட்டு விடக்கூடாது.

தளரவிட்டுவிட்டால் தமிழகத்தில் பெரியார் சகாப்தத்தில் மூச்சாக இருந்து விடுலைக் கொள்கை, அண்ணா சகாப்தத்தில் வெறும்பேச்சாகக் குன்றி, கலைஞர் சகாப்தத்தில் மாநில சுயாட்சியாகக் குறுகி எம். ஜி. ஆர். சகாப்தத்தில் கூடுதல் அதிகாரம்போதும் என்ற அளவிலே அருகி, இந்த இருவரின் போட்டா போட்டியால் இன்று ஒன்றுமில்லாமல் உருகிஓடிவிட்டதைப் போலத்தான் தமிழீழத்திலும் ஆகிவிடும்.

அப்படி ஆகிவிட்டால், உலகத் தமிழினத்திற்கே இனி உதய காலமில்லை என்றாகிவிடும். ஏனெனில், கார்சினி வாழ்தமிழர்களுக் கெல்லாம் இன்று கடைசி நம்பிக்கை நட்சத்திரமாக இருப்பது தமிழீழம் ஒன்றுதான்.

எனவே, தமிழீழத் தலைவர்களின் கரங்களில் இன்று தரப்பட்டிருக்கும் கடமை' தமிழீழத் தன்னாட்சியை மீட்பது மட்டுமல்ல; உலகத் தமிழர்களின் தன்னம்பிக்கையைக் காப்பதுமாகும்.

ஆதலால், விடுதலைப் போராட்டத்தை அங்கு உடனே தொடங்கவேண்டும். தமிழர் கூட்டணியின் வேலைத்திட்டம் அதை மையமாக வைத்தே வகுக்கப்பட வேண்டும்: தேர்தல் திருநாட்களை இரண்டாம் பட்சமாக்க வேண்டும்.

ஏனென்றால், தமிழ் நிலத்தை சிங்களமயமாக்கும் திட்டத்தை சிறீலங்கா அரசு வேகமாகச் செய்து கொண்டிருக்கிறது. 'அம்பாறை' என்ற ஒரு தமிழ் மாவட்டமே 'திகாமடுல்ல' என்றபெயரால் சிங்கள மாவட்டமாக்கப் படுகிறதென்றால், நாளை யாழ்ப்பாணம் தானும் மிஞ்சுமா? என்பது கேள்விக் குறியாகவே இருக்கிறது.

குதிரை பறிபோனபின் இலாயத்தை இழுத்துப் பூட்டுவோம் என்று சொல்வதால் என்ன பயன்?

ஆகவே, தந்தை செல்வாவுக்கு எடுக்கும் விழா தமிழீழ விடுதலைப் போராட்ட உருவத்தில் இருப்பதே வேண்டப்படுவதாகும்.

இதைத் தமிழீழத்திற்குள் தான் செய்யவேண்டும். அதே நேரத்தில் தலைவர்களை மட்டும் குறைகூறிக் கொண்டிருப்பதில் புண்ணியமில்லை அவரவரும்தான் களத்தில் இறங்கிப் பணியாற்றவேண்டும்.

தரணிவாழ் தமிழர்கள் எப்போதும் இதற்கு உறுதுணையாக இருப்பார்கள்.

தந்தை செல்வாவின் 83 வது பிறந்த நாள் இதற்குரிய ஆதர்சத்தை இருபுறத்தும் வழங்குமாக! ✻

---

# 'சுதந்திரன்' கேள்விக்கு பதில் சொல்ல வேண்டியது அதன் உரிமையாளரே!

**புயலோன்**

கதிரவேற்பிள்ளை மரணத்துக்கு காரணஸ்தர்கள் யார்? இது 8-4-81 சுதந்திரனின் முற்பக்க முக்கிய கேள்வி. இதற்குத் த. வி. கூ. சட்டத்துறைச் செயலாளர் திரு. செ. சந்திரகாசனின் மறுமொழியைப் பாருங்கள்!

"எங்களைப் போன்ற ஓரளவு சுகம் பலம் உள்ளவர்கள், செய்யத்தவறியதை திரு. கதிரவேலுப்பிள்ளை அவர்கள் செய்யப்புகுந்ததுதான் அவர் மரணத்துக்குக் காரணமாக இருக்குமானால், அந்தக் கொலைக்குற்றம் எம் சந்ததியையே சாரும்."

சுதந்திரனின் கேள்விக்குக் கீழேயே இந்தப் பதிலும் 8-4-81 சுதந்திரனில் உள்ளது. சுதந்திரனின் சொந்தக்காரரான திரு. சந்திரகாசனின் இந்தப் பதில் பொருத்தமற்றதென்று சுதந்திரன் ஆசிரியர் கருதினபடியால் தான் பழியைப் பிறருடைய தலையிலே சுமத்தக் கேள்வி கேட்டிருக்கிறார்.

அமரர் கதிரவேற்பிள்ளையின் மரணத்துக்குக் காரணம் அவருடைய இருதயநோய் தான். இது உலகமறிந்த காரணம்.

அமரர் கதிரவேற்பிள்ளை 10-3-81 இல் தமது தொகுதியில் நடைபெற்ற கிராமயாத்திரையின் போது இரண்டு கருத்தரங்குகளுக்குச் சென்றவுடன் அவருடைய கால்கள் வீங்கிக் களைப்படைந்தார். அவரை ஓய்வெடுக்குமாறு தலைவர்களும் தொண்டர்களும் அனுப்பிவிட்டுக் கிராமயாத்திரையைத் தாங்களே பொறுப்பேற்று நடத்தினர்.

அமரர் கதிரவேற்பிள்ளை இந்தியாவுக்குப் புறப்படுகிறார் என்ற செய்தி பத்திரிகைகளில் வெளிவந்தது. மக்கள் பலரும் த. வி. கூட்டணியினரில் ஐந்தாறு பேரைத் தவிர்ந்த எல்லோரும் அவர் முன் இடைக்கிடையே சென்றது போலச் சிகிச்சைக்காகத்தான் செல்கிறார் என்று எண்ணினார்கள்.

இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த அவர் இந்தியாவுக்குச் சென்றார் (சுதந்திரன்-8-4-81) என்பது அவர் அமரரான பின்னர் தான் இந்த மக்களுக்குத் தெரியவந்தது.

அவர் இந்தியாவுக்குப் போகும் பொழுது கொழும்பில் அவர் சிலரைச் சந்தித்தார். த.வி.கூ. செயலாளர் நாயகத்துடன் பா. உக்களான இராசம்பந்தன், சூசைதாசன், யோகேஸ்வரன், துரைரத்தினம் என்போரை ஒன்றாகவும் த. வி. கூட்டணிச் சட்டத்துறைச் செயலாளர் திரு. செ. சந்திரகாசன் அவர்களை அழைத்துத் தனியாகவும் சந்தித்தார்.

(சுதந்திரன் 8-4-81)

செயலாளர் நாயகமும் த. வி. கூட்டணிப் பா. உக்களும் அவர் பிரயாணஞ் செய்யக்கூடிய நிலையில் இல்லை என்றும் வேறு யாராவது செல்லலாம் என்றும் வற்புறுத்திக் கூறினர். எனினும் அவர் தாமே போகவேண்டுமெனப் பிடிவாதமாகநின்றார்.

(உதயசூரியன் 10-4-81)

15 அடி நடக்கவே மூச்சு வாங்குகின்ற நேரத்தில் அவரைச் சந்தித்த சந்திரகாசன் என்ன செய்தார்? தடுக்க முயலவில்லை. "அந்த நேரத்திலே நாங்கள் அவர் போவது சிறந்தது என்று முடிவெடுத்தோம். இது எனக்கும் நடக்கலாம் என்று சொல்லியும் கூட முடிவெடுத்தோம்." என்று சந்திரகாசனே கூறுகிறார். சுதந்திரன் 8-4-81 பக்கம் 4 பார்க்குக.) இது (மரணம்) தமக்கு நடக்கலாம் என்று அமரர் கதிரவேற்பிள்ளை சொல்லியும் கூட அவரை அனுப்புவதற்கு முடிவு எடுக்கப்பட்டது என்று திரு. சந்திரகாசன் அடித்துக் கூறுகிறார்.

த. வி. கூ, செயற்குழுவோ பொதுச்சபையோ, பாராளுமன்றக் குழுவோ அவரை அனுப்பவில்லை. திரு. சந்திரகாசனும் அவர் கூறும் "நாங்கள்" என்பதில்அடங்கினோருமே அவரை அனுப்பினார்கள்.

எனவே, அமரர் கதிரவேற்பிள்ளையின் மரணத்துக்கு நோய் காரணமில்லை என்றால் அவரைத் தடுத்தவர்களா? தடுக்காமல் போவது சிறந்தது என்று முடிவு எடுத்து அனுப்பியவர்களா? காரணஸ்தர் என்பதை மக்கள் தீர்ப்புக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

"அந்த நேரத்திலே நாங்கள் அவர் போவது சிறந்தது என முடிவெடுத்தோம் இதுஎனக்கு நடக்கலாம் என்று சொல்லியும் கூட" என்று திரு. சந்திரகாசன் பேசியிருக்கிறார். (அவருடைய பத்திரிகை சுதந்திரன் 8-4-81 பக்கம் 4 பார்க்குக.) எனவே பின்வரும் கேள்விகளுக்குச் சந்திரகாசன் பொதுவாக மக்களுக்குச் சிறப்பாக த. வி. கூட்டணியினருக்கும் மறுமொழிகூறக் கடமைப்பட்டவராகிறார்:

1) "நாங்கள்" என்று அவர் குறிப்பிடுபவர்கள் யார்? அமரர் கதிரவேற்பிள்ளை அவரைச் சந்தித்த பொழுது வேறு யார் அவருடன் இருந்தார்கள்?

அவரைப் போகச் சொல்லி அவருடைய கட்சி த. வி. கூட்டணி முடிவெடுக்கவில்லை. 1) அவர் போவது சிறந்தது என்று முடிவெடுத்தவர்கள் யார்? 2) என்ன உரிமையினால் அவர்கள் முடிவெடுத்தனர்? 3) த. வி. கூட்டணியின் தலைவர்கள் தடுக்க அதற்கு மாறாகப் போவது சிறந்தது என்று முடிவெடுக்கும் அதிகாரமும் உரிமையுமுடைய "நாங்கள்" என்போர் எக்கட்சியைச் சேர்ந்தோர்? 4) அவர்களில் சுகபலமுள்ள ஒருவராவது அவருடன் சேர்ந்து போகாமல் விட்டதன் காரணம் யாது?

இந்தக் கேள்விகளுக்கு திரு. சந்திரகாசன் தமது பத்திரிகைமூலமோ அவரது கட்சி ஏடானஉதயசூரியன் மூலமோ மறுமொழி தந்தால் பிழையான கருத்துக்களும், துரோகச் செய்திகளும், பல்வகையான வியாக்கியானங்களும் பரவுவதைத் தடுத்துத் தமிழினத்தின் ஒற்றுமையை நன்கு நிலைநாட்டுதற்கு உதவும். ✻

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திச் சபையால் பயன் ஏற்படாவிடின் போராட்டக் களத்தில் குதிப்போம்!

மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மூலம் எமது பிரதேசங்களை நாம் அபிவிருத்தி செய்யும்போது அதனை அரசு தடுத்தால் அதிலிருந்து நாம் போராடுவதுதான் சரியானது இதனால் எமது மண்ணை அபிவிருத்தி செய்வதை தடுக்கிறார்கள் என உலகில் நாம் பிரசாரம் செய்வோம்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், கரவெட்டி அரசடியில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைதமிழினத்திற்கு சாதகமா? பாதகமா? என்ற தலைப்பிலான கருத்தரங்கில் பேசும்போது கூறினார்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் பேராசிரியர் இ. முத்துத்தம்பி தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் திரு. அமிர்தலிங்கம் எம். பி. மேலும்பேசுகையில் கூறியதாவது.

மாவட்ட அபிவிருத்திச் சபை எமக்கு சுதந்திரத்தை சுயாட்சியைத் தரவில்லை. ஆனால் தமிழினத்திற்கு குறுகிய பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ள அதாது வரம்புகளைக் கட்டி பாதுகாக்கும் வசதிகளைத் தரும்.

இச் சபைக்கு நீர்ப்பாசனம், விவசாயம், காணி ஆகியன உட்பட 15 விடயங்களில் அதிகாரம் உண்டு. இவைகளைப் பயன்படுத்தி எமது பிரதேசங்களில் நீர்ப்பாசன, கைத்தொழில் வசதிகளை ஏற்படுத்தி அங்கு எம் இளைஞர்களை வாழவைப்போம். இந்த அபிவிருத்திகளை நாம் மேற்கொள்ளும்போதும் அரசு தடுத்தால் அதிலிருந்து நாம் போராடுவது தான் சரியானது. நாம் மேற்கொள்ளும் அபிவிருத்திகளை அரசு தடுக்கும்போது எங்கள் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதை தடுக்கின்றார்கள் என உலகில் நாம் பிரசாரம் செய்வோம் இதனால் எமது பிரசாரம் வலுவடையும்.

கடந்த 1978 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தன இந்தியாவுக்குச் சென்ற போது தமிழர் பிரச்சனை தீர்ந்து விட்டது என்றார். அவருக்குப் பின் தான் இந்தியாவுக்குச் சென்று அவரது பிரசாரத்தை முறியடித்தேன். கொடுமை செய்கின்ற எந்த ஒரு அரசும் தாம் கொடுமை செய்யவில்லை என்று தான் வெளிநாடுகளுக்கு கூறும். அந்த முகமூடிகளை நாம் கிழித்தெறியவேண்டும்.

வெளிநாடுகளிலுள்ள தமிழர்களுக்கு அண்மைக்காலமாக கூட்டணி பற்றி தப்பபிப்பிராயம் கொடுத்தார்கள். இன்று வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் விழிப்பாக இருக்கிறார்கள். லண்டன்



ந்த வேளையில் கனடாவிலிருந்து வந்த கலாநிதி வில்சன் அவர்கள் எம்மிடம் வந்து அரசாங்கம் மாவட்ட அபிவிருத்திச்சபைச் சட்டத்தைக் கொண்டு வருகிறது அதன் மூலம் எங்கள் பிரதேச பாதுகாப்பை வலுப்படுத்துமா என்பதனை ஆராய்ந்து பார்க்கலாமா எனக் கேட்டார். இதனையொட்டி நாம் பல மாதங்களாக தீவிரமாகச் சிந்தித்தோம்.

ஒரு புறம் அடக்கு முறை மறுபுறம் எம்மாவட்டமே சிங்கள மாவட்டமாகும் நிலமை. இதற்கு மத்தியில் அரசு மாவட்ட அபிவிருத்திச் சபையினைக் கொண்டு வர யோசனை செய்து தேச பாதுகாப்புக்கருதி மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்றோம்.

நமது பிரதேசங்களில் அரசாங்கக் குடியேற்றம், வீடமைப்புத்திட்டம், பருவகால மீன்பிடிக்கும் தொழில், எங்கள் பகுதியில் வேலைவாய்ப்பு போன்ற பல்வேறு ரூபத்தில் சிங்களக் குடியேற்றம் நடந்து வருகிறது. 1691ஆம் ஆண்டு இலங்கையை ஆட்சிசெய்த குடியேற்ற நாட்டுஅதிகாரியின் காரியதரிசி இலங்கையில் இரு தேசிய இனங்கள் உண்டு அவை பாரம்பரிய பூமிகளைக் கொண்டு வாழ்கின்றன என்று படம்போட்டு எல்லைகாட்டி எழுதிவைத்துள்ளார்.

அவரது எல்லைகளின்படி சிலாபம் தொடக்கம் கிழக்கே கும்புக்கன் ஆறுவரையும் எனக் குறிப்பிட்டுள்ளார். அதன்படி எமது பிரதேசம்

## கரவெட்டிக் கூட்டத்தில் 'அமிர்' முழக்கம்!

முரசு கூட்டணி இயக்கத்தின் அபிப்பிராயங்களை வெளிநாடுகளில் தெளிவடையச் செய்து வருகிறது. அங்கு நிலைமை மாறிவருவது கண்டு நாமும் தெளிவடைகிறோம்,

கடந்த 1979 ஆம் ஆண்டு வவுனியா எல்லை மாற்றப் பிரச்சினை, வடக்கில் அவசர கால நிலைமை ஆகியன இருகொண்டிருந்தது இந்நிலையில் எமது பாரம்பரிய பிரதேசத்தைப் பாதுகாக்க தமிழ் ஈழ இலட்சியத்தைவிட்டுக் கொடுக்காதவகையில் மாவட்ட அபிவிருத்திச்சபைகளை ஏற்றுக்கொள்வதென நாம் தீர்மானித்தோம். எமது தலைவர்களின் வழிநடத்தல் கடந்த கால அனுபவங்கள் ஆகியன வற்றைவைத்தே இம்முடிவை நாம் ஏற்றோம்.

1956ஆம்ஆண்டுதொடக்கம் 1977ஆம் ஆண்டுவரை இருந்த அரசியல் வரலாற்றினையும் அரசாங்கத்திற்கும் அமரர் செல்வநாயகத்திற்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தங்கள் பற்றியும் அவற்றிற்கு நேர்ந்தகதிபற்றியும் விரிவாக விளக்கமாக எடுத்துக்கூறிய திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தைப் பாதுகாக்க சிங்களக் குடியேற்றத்தைக் கைவிடவேண்டும் எனத் தந்தை செல்வா அரசுகளுடன் செய்த ஒப்பந்தங்களில் வலியுறுத்தி இருந்தார். 27 வருடமாக தந்தை செல்வா தமிழ் மண்ணைக் காக்கப் பாடுபட்டார். ஆயினும் அது நிறைவேறவில்லை. அதனால்தான் பிர

இன்று இல்லை. அம்பாறை, திருகோணமலை, மன்னார், பேசாலை, தலைமன்னார் ஆகிய இடங்களில் இன்று சிங்களக் குடியேற்றம் அதிகரித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் தமிழ்மக்களின் பாரம்பரியப் பிரதேசங்கள் பறிபோய்க் கொண்டிருக்கின்றன. இப்பிரதேசங்களில் நிலைமை மோசமாகாமல் பாதுகாக்க இன்னமும் காலம் தாழ்ந்துவிடவில்லை, முஸ்லிம் மக்களும் தமிழ்மக்களும் ஒன்றுபட்டால் கிழக்கு மாகாணத்தைக் காப்பாற்ற முடியும். எமது பிரதேசத்தை வேலிபோட்டுக் காப்பாற்றினால் அது தமிழ் ஈழத்திற்கு தடையாக இருக்க முடியாது. பிரதேசத்தைப் பாதுகாக்காது விட்டால் தமிழ் ஈழம் வெறும் கனவாக முடிந்துவிடும்.

எம்மிடம் 'காஸ்' போன்ற வேகம் கூடாது. கட்டுப்பாடுடன் தெளிவுடன்கூடிய வேகம் வேண்டும். இதனால்தான் கட்டுப்பாடான அமைப்பு, இலட்சியம் ஆகியவற்றைக் வென்றெடுக்க உதவும்.

---

# எத்தனை நாளைக்கு இந்த ஏமாற்று வித்தை?

10-4-81 இல் வீரகேசரியில் வெளிவந்த செய்தியை "அபிவிருத்திச்சபையால் அம்பாறை மாவட்டத்தமிழருக்கு ஆபத்து" "தமிழர் விடுதலைக் கூட்டணி அமைப்பாளர் சிந்தாதுரை கருத்து" என்று முழுப்பக்கத்தலையங்கம் கொடுத்து சுதந்திரன் 15-481 இதழில் வெளியிட்டுள்ளது.

திரு. சிந்தாதுரை இன்றைய அரசாங்கமோ புதிய மாவட்ட அபிவிருத்திச்சபையில் எமக்குரிய பிரதிநிதித்துவத்திற்கு நிச்சயமற்ற ஒரு நிலையைத் தோற்றுவித்துள்ளது" என்று தான் கூறினரே தவிர அபிவிருத்திச்சபையால் அம்பாறைமாவட்டத் தமிழருக்கு ஆபத்து என்று அவர் கூறவில்லை. உண்மை இவ்வாறிருக்கச் சுதந்திரன் ஆசிரியர் வேண்டுமென்றே திரித்தும் புரட்டியும் தலையங்கம் தீட்டும் கலைத்திறனை இதிலும் காட்டியுள்ளார்.

"அம்பாறை மாவட்ட அபிவிருத்திச்சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் நான்கு பிரதிநிதிகளுக்குப் பதிலாக ஐந்தாக இருந்தால்தமிழ்ப்பிரதிநிதித்துவத்தை அடைவது நிச்யமானதாக இருக்கும்" இதுதான் சிந்தாதுரையின் மூலக் கருத்து

"ஆகவே அம்பாறைச் சபைக்கு மேலதிகமாக இன்னும் ஒரு பிரதிநிதிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்க வேண்டும். அதுதான் நடக்கவில்லை" இது அவர் விருப்பம், எதிர்பார்ப்பும். இவ்வாறு திரு சிந்தாதுரை கூறுவதில் எவரும் குறைகாணமுடியாது. மாவட்ட அபிவிருத்திச்சபையின் சட்டத்தை அவர் நன்கு படித்திருக்கமாட்டார். ஐந்து பாராளுமன்ற உறுப்பினர் உள்ள மாவட்டத்தின் மாவட்ட அபிவிருத்திச்சபைக்கு நான்கு உறுப்பினர்களைத்தான் தெரிவு செய்யவேண்டுமென்பது சட்டநியதி,

திரு. சிந்தாதுரை குறிப்பிட்ட மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களுக்குத் தனித்தனி பாராளுமன்ற உறுப்பினருடன் குறைந்தது ஐந்து அபிவிருத்திச்சபை உறுப்பினர்இருக்கவேண்டும். எனவே ஒவ்வொருபாராளுமன்றஉறுப்பினருள்ள இந்த மாவட்டங்களுகுத் தனித்தனி நான்கு அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும் என்பது சட்டம்,

இந்தச் சட்டநியதிகளை உடனே மாற்றுதற்கு எவருக்கும் அதிகாரமில்லை. இதுவும் திரு. சிந்தாதுரைக்குத் தெரியாது. தெரிந்தால் அவர் அப்படிப் பேசியிருக்க மாட்டார். அவர் சுதந்திரன் எழுதியது. போலப் பழம் பெரும் இயக்கத் தொண்டர். அன்றியும் கைம்மாறு கருதாமலும் தலைவர்களைப் பழிவாங்காமலும் இயங்கும் நற்றொண்ட .

சுதந்திரன் ஆசிரியர் மாவட்டஅபிவிருத்திச்சபைச் சட்டத்தைக் கரைத்துக்குடித்து சீரணிக்கமுடியாமல் அவலப்படுவர். இத்தகைய மா. அ. ச. சட்டஞானி அச்சட்டம் தெரியாமையால் திரு. சிந்தாதுரை வெளியிட்ட கருத்தை வேறொரு பத்திரிகையிலிருந்து எடுத்து தமது பத்திரிகையில் மீள வெளியிட்டதன் காரணம் யாது? இந்தக் கருத்துரைக்கும் அவர் கொடுத்த தலையங்கமே அக்காரணத்தை விளக்குகிறது. சிந்தாதுரையும் "ஆபத்து" என்கிறார் என்று கூறிச்சட்டத்தையறியாத மக்கள் யாவரையும் ஏமாற்றத் தானே சுதந்திரன் ஆசிரியர் முயன்றிருக்கிறார். ஏமாற்று வித்தை எத்தனை நாளைக்கு நிலைக்கும்?

---

## திருக்குறள்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தன்னை உலகினுக்கே தந்தது"
(10 நிமிடப்பேச்சு)

அதிமேற்பிரிவு - (20 வயதுக்கு மேல்) எழுந்தமானப் பேச்சு 10 நிமிடங்களுக்கு.

கீழ்க்காணும் படிவத்தில் அமைந்த விண்ணப்பங்கள், 30. 04. 81 அன்று அல்லது அதற்குமுன்பு கிடைக்கத்தக்கதாகப் பதிவுத்தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

திரு. நா. கந்தசாமி
தலைவர், திருக்குறள் மாநாட்டுக்குழு, 3ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

---

## தொழிற்சங்கக் கூட்டணியின் மேதினவிழா

இலங்கை தமிழ் மொழி வழித் தொழிற்சங்கக் கூட்டணி எதிர்வரும் 1ம் திகதி பி. ப 4 மணிக்கு யாழ் -- மத்திய கல்லூரி மைதானத்தில் மேதினவிழாவைச் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்து வருகின்றது.

இவ்விழாவில் தலைவர்கள் அமிர், சிவா, கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர்.

---

(இந்தியா தவிர்ந்த)
**வெளிநாடுகளுக்கான சந்தா 25 அமெரிக்கன் டொலர்கள்**

இப்பத்திரிகை 'உதயசூரியன்' வெளியீட்டகத்தினரால் [illegible] கத்தோலிக்க அச்சகத்தினரால் 1981-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org